பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:14 வள்ளுவர் ஆண்டு 2030 ஆடி 04 செவ்வாய்க்கிழமை [20-07-1999] UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:202

ஆசிரியர் போராட்டத்தால்

## சகல பாடசாலைகளும் நேற்று செயலிழந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஒன்பது அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் நேற்று நடத்திய ஒரு நாள் சுகவீன விடுமுறைப் போராட்டம் காரணமாக யாழ். குடா நாட்டில் சகல பாடசாலைகளும் செயலிழந்தன.

குடாநாட்டில் பணிபுரியும் சுமார் ஐயாயிரம் ஆசிரியர்களில் தொண்ணூறு வீதத்துக்கும் அதிகமானோர் நேற்று சுகவீன விடுமுறையில் சென்றனர். பெரும்பாலான பாடசாலை அதிபர்களும், கல்விசாரா ஊழியர்களும் கூட இந்தப் போராட்டத்தில் முனைப்புடன் ஈடுபட்டனர்.

தரக்குறைவான பாட நூல்கள் விநியோகம் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களுக்கு கற்றல் — கற்பித்தல் தொடர்பான பொருள்களை எடுத்துச் செல்வதற்கான தடை, ஆசிரியர்கள் மற்றும்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அதிபர், ஆசிரியர்களுக்கு 6 மாத இடர் கொடுப்பனவு

### மாகாண அமைச்சு நேற்று அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வடக்கு – கிழக்கு மாகாண பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுக்கு ஆறுமாத காலத்துக்குரிய இடர்காலக் கொடுப்பனவை வழங்குமாறு மாகாணக் கல்வி அமைச்சு நேற்று உத்தரவிட்டது.

இடர்காலக் கொடுப்பனவு வழங்குவது உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து ஆசிரியர்கள் நேற்று சுகவீன லீவுப் போராட்டத்தில் ஈடுபட்டது தெரிந்ததே.

6 மாத காலத்துக்கு உரிய

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வேலணைக் கிணற்றினுள் பெண்ணின் எலும்புக் கூடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

வேலணை பிற்பனை என்னும் இடத்தில் கிணறு ஒன்றில் எலும்புக்கூடு ஒன்றும் பெண்களின் ஆடைகள் சிலவும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிற்பனை முருகன் கோயிலுக்கு அருகே உள்ள ஒரு வீட்டில் கிணற்றைச் சுத்திகரிப்பதற்காக இறைத்த சமயம்

(10ஆம் பக்கம் பார்க்க)

# மன்னாரில் படையினர் மீது சூடு; பின்னர் அப்பாவிகள் மீது தாக்குதல்!

## 7 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதி; கடைகள், வீடுகள் தீக்கிரை!

மன்னார், ஜூலை 20

**மன்னாரில் 'சனிவிலேஜ்' என்னும் இடத்தில் நேற்று நண்பகல் 12-30 மணியளவில் விடுதலைப் புலிகளின் பிஸ்டல் குழுவினர் நடத்திய தாக்குதலில் படையினர் இருவர் கொல்லப்பட்டனர்.**

**இத்தாக்குதலைத் தொடர்ந்து படையினர் நடத்திய துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தாக்குதல்களில் சிக்கி பத்துக்கும் மேற்பட்ட சிவிலியன்கள் காயமடைந்தனர். அவர்களில் சிலர் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். பொதுமக்களின் வீடுகள் சிலவும் தீக்கிரையாக்கப்பட்டன.**

சனிவிலேஜ் முகாமில் இருந்து அருகே உள்ள கீரி என்ற கிராமத்துக்கு சைக்கிளில் சென்ற படையினர் இருவரே பிஸ்டல் குழுவினரின் தாக்குதலில் பலியானதாகக் கூறப்படுகிறது. அவர்களில் ஒருவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார். மற்றவர் படுகாயமடைந்த நிலையில் மன்னார் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு உயிரிழந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

கே. சரத்குமார, கோப்ரல் குமாரசிங்க ஆகிய இரு படையினரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டனர்.

[10 ஆம் பக்கம் பார்க்க]

## அ'புரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டோர்

மன்னார், ஜூலை 20

மன்னார் சனிவிலேஜில் நேற்று இடம்பெற்ற அசம்பாவித சம்பவங்களில் காயமடைந்த பொதுமக்களில் படுகாயங்களுக்கு உள்ளான மூவர் வவுனியா ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் அங்கிருந்து அனுராதபுரம் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

☆ வல்லி நட்சத்திரம் லோறன்ஸ் (வயது 48 விஞ்

( 10 ஆம் பக்கம் பார்க்க)

## சம்பவம் நடந்த பகுதிக்கு படை அதிகாரிகள் விஜயம்

### 3 சிப்பாய்கள் விசாரணையில்

வவுனியா, ஜூலை 20

சனிவிலேஜ் பகுதியில் பொதுமக்கள் தாக்குதலுக்கு இலக்கான சம்பவம் தொடர்பாக படையினர் மூவர் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடந்த கீரி கிராமப் பகுதிக்கு நேற்றுப் பிற்பகல் நேரில் விஜயம் செய்த மன்னார் மாவட்ட இணைப் பதிகாரி பிரிகேடியர் ரஞ்சித் சில்வா மேற்படி மூன்று

(10ஆம் பக்கம் பார்க்க)

போக்குவரத்துத் தடையினால்

## ஜி. சீ. ஈ. பரீட்சை வன்னியில் நடக்குமா?

### மாணவர் மத்தியில் குழப்பம்

வவுனியா, ஜூலை 20

வன்னிக்கான போக்குவரத்துத் தடை காரணமாக எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2 ஆம்திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைகள் வன்னிப் பகுதியில் நடைபெறுமா? என்பது குறித்து மாணவர்கள் மத்தியில் குழப்ப நிலை ஏற்பட்டிருப்பதாக முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் க. குருகுலராஜா தெரிவித்துள்ளார்.

அதிபர்கள் தெரிவுக்கான போட்டிப்பரீட்சையும் கடந்த 4 வருடங்களின் பின் இந்த மாதம் வன்னியில் நடைபெறுவதாக இருந்தது.

இந்தப் பரீட்சையும் நடைபெறுமா? என்பதும் இப்போது சந்தேகத்துக்குரியதாகவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

( 10ஆம் பக்கம் பார்க்க)

## செஞ். அலுவலக காவலாளி கைது

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டக்களப்புநகரில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அலுவலகத்தின் காவலாளி ஒருவர் நேற்று முன்தினம் இரவு 8. 30 மணியளவில் படையினரால் கைது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை, ஐ.நா. அலுவலகங்கள் முன்பாக நேற்றும் மறியல் போராட்டம்!

### இன்று முதல் இரவு பகலாக தொடரும்

வவுனியா, ஜூலை 20

வன்னிக்கான போக்குவரத்துப்பாதை ஒன்றை உடனடியாகத் திறக்கக்கோரி மல்லாவியில் உள்ள அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியனவற்றின் அலுவலகங்களுக்கு முன்பாக நேற்றும் பொதுமக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் அலுவலகங்களின் பணிகள் பாதிக்கப்பட்டன.

நேற்றுக் காலை 9 மணிக்கு ஆரம்பமான மறியல் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்டனர்.

அரசும், சர்வதேச தொண்டர் அமைப்புக்களும் இணைந்து நிரந்தரமான போக்குவரத்துப் பாதையை திறப்பது தொடர்பாகத் தீர்க்கமான ஒரு முடிவைத் தரவேண்டும் எனக் கோரியே கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தமறியல் போராட்டம் நடைபெற்று வருகிறது.

நிரந்தர பாதை திறப்பது தொடர்பாகத் தீர்க்கமான பதில் வரும்வரை இந்தப் போராட்டம் தொடர்ந்து நடத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

வட பிராந்திய பார ஊர்திகள் சங்கம், வன்னிப் பகுதி

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

பட்டமளிப்பு விழா அங்கிகளை உலர் சலவை செய்தல் (Dry Cleaning)

யாழ். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா அங்கி ( Cloak ) ( சுமார் 700 ) மேலங்கி ( Hood ) என்பன வற்றை உலர் சலவை செய்யவேண்டியுள்ளதால் சலவையக உரிமையாளர்கள் தங்களது விலைக் கூற்றை 10 - 08 - 99 ஆம் திகதிக்கு முன்னர் உதவிப் பதிவாளர், கல்விக் கிளை, யாழ். பல்கலைக் கழகம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும். இது தொடர்பான மேலதிக விவரங்களை உதவிப் பதிவாளர், கல்விக் கிளை அவர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

— பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
19-07-99 (சி/8242)


## யாழ்ப்பாணத்தில்
# கல்வியியல் கல்லூரி ஒன்றை நிறுவும் நடவடிக்கையில் இழுபறி நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பணத்தில் கல்வியியல் கல்லூரி ஒன்றை நிறுவுவதற்கு உலக வங்கியினால் 4 கோடி ரூபா கடந்த ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் இந்தக் கல்லூரியை நிறுவுவதில் இழுத்தடிப்பு செய்யப்பட்டு வருகிறது.

கல்வியியல் கல்லூரி நிறுவுவதற்கென புளொட் அமைப்பின் தலைவர் த, சித்தார்த்தனினால் இருபாலைப் பகுதியில் அன்பளிப்புச் செய்யப்பட்ட 215 பரப்புக்காணியும் நில அளவைகள் செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தக் காணியில் மேற்படி கல்லூரியை நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டும், சம்பந்தப்பட்டவர்கள் இந்தக் கட்டட வேலைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை எதிலும் இதுவரை ஈடுபடவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

இதே வேளை இந்தக் கல்வியியல் கல்லூரியைகோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் கடந்த ஜனவரி மாதம் ஆரம்பிப்பதற்கான முயற்சிகளை யாழ்- கல்வி வலயப் பணிப்பாளர் கலாநிதி என். தணிகாசலம்பிள்ளை மேற்கொண்டிருந்த போதும் அதற்கான அனுமதி இதுவரைக்கும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப் படுகிறது. (இ-5-6-ரி)

## சாரணர் பயிற்சி

சாவகச்சேரி, ஜூலை 20

சாரணர் தலைவர்கள், குருளைச்சாரணர் தலைவர்களுக்கான அவத்தை—2— பயிற்சி கைதடி நவீல்ட் பாடசாலையில் மாவட்ட சாரணர் ஆணையாளர் மா. புவனேந்திரன் தலைமையில் நடைபெற்றது

சாரணர் தலைவர்களுக்கான பயிற்சிகளை மா. புவனேந்திரனும், குருளைச் சாரணர்களுக்கான பயிற்சிகளை திருமதி வி. சேவியரும் நடாத்தினர் (இ-31)

## பாலர் பாடசாலை

அளவெட்டி, ஜூலை 20

சுன்னாகம்பனை,தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் தனது சங்கப் பரப்பெல்லைக்குள் பதினாறு பாலர் பாடசாலைகளை நடத்தி வருகின்றது.

இந்தப் பாலர் பாடசாலைகளில் கல்வி பயிலும் 392 மாணவர்களுக்கு நாளாந்தம் போஷாக்கு உணவுகளும் வழங்கப்படுகின்றன.

அத்துடன் மாணவர்களுக்கு இலவச சீருடைகளை வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சங்கப் பொது முகாமையாளர் திரு. ஜே.பி. குணரட்ணம் தெரிவித்தார். (இ-13)

## பரீட்சை விண்ணப்பம் குறித்து அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

இந்த வருடம் நடைபெற உள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதர பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் பாடசாலை மாணவர்கள் அனைவரும் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் கணிதம் I, II, விஞ்ஞானம் I, II என இரண்டு பாடங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

ஜி சீ.ஈ. உயர்தர வகுப்பில் கணிதப் பிரிவில் கல்வி கற்க விரும்புவோர் கணிதத்துக்குரிய இரண்டு பாடங்களிலும் விஞ்ஞானப் பிரிவில் கல்வி கற்க விரும்புவோர் விஞ்ஞானத்துக்குரிய இரண்டு பாடங்களிலும் சித்தியடைதல் வேண்டும்.

இது பற்றிய சுற்றறிக்கை பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

பாடசாலைக்கு வெளியே தோற்றுவோருக்கு இந்தப் புதிய திட்டம் நடைமுறைப் படுத்தப்படவில்லை எனவும் அவர்கள் கடந்த காலங்களில் விண்ணப்பித்தது போன்று விண்ணப்பிக்கலாம் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## தவறவிட்ட பேர்ஸ்

பஸ்ஸில் கண்டெடுக்கப் பட்ட தங்கநகைகள்கொண்ட பேர்ஸ் ஒன்றைப் பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் யாழ். பஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுக் காலை யாழ். பஸ் நிலையத்திலிருந்து மாதகல் நோக்கிச் சென்ற 789 மார்க்க பஸ்ஸில் கண்டெடுத்த அந்தப் பேர்ஸினுள் தங்க நகைகளுடன் ஒரு பெண்ணின் அடையாள அட்டையும் காணப்பட்டன.

பஸ் சாரதியான எம். எஸ். குஞ்சிராசா, நடத்துநர் வி. சிவராசா ஆகியோர் இந்தப் பொருள்களை பஸ் நிலையக் காரியாலயத்தில் ஒப்படைத்தனர். (ஐ-117)

## குடும்பப் பெண் கிணற்றுக்குப் பலி

தென்மராட்சி, ஜூலை 20

தண்ணீர் அள்ளுவதற்குச் சென்ற இளம் குடும்பப்பெண் ஒருவர் கிணற்றில் தவறி வீழ்ந்துபலியானார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் மீசாலை அல்லாரையில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த மகேந்திரன் குஞ்சு என அழைக்கப்படும் 32 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாயாரே மரணமானவராவார்.

நிலமட்டத்துடனான கிணற்றிலேயே தவறி வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. இவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

(ஐ-117-15)


## கண்ணீர் அஞ்சலி

எமது நிலைய இயக்குநர்
திரு. சி. திருஞானசெல்வம்
அவர்களின் அன்புத் தந்தையார்
**சின்னத்தம்பி சின்னையா**

அவர்கள் சிவபதம் அடைந்ததையிட்டு அன்னாரது குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

THARRMSONS COMMUNICATION
T. P No. 021 - 2790

2-4 கனகரட்ணம் வீதி, (சந்தி)
அரியாலை, யாழ்ப்பாணம். (67593)


## மரண அறிவித்தல்கள்

### பேரம்பலம் கந்தசாமி

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி (P.K ) நேற்றுப் பகல் காலமாகிவிட்டார்.

இவர் பேரம்பலம்–பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் தங்கமலரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நவமணி, கனகமணி ஆகியோரின் சகோதரனும், செந்தில் வதனா, செந்தில் ரங்கன், செந்தில் மோகன், செந்தில் ராஜன், செந்தில்நாதன் ஆகியோரின் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20-07-99) கொழும்பில் நடைபெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச, நவரத்தினம்
[பெறா மகன்]

No: 58, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி (67589)

### திருமதி லலிதாதேவி இரவீந்திரன்

அரியாலை திருமகள் வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி லலிதாதேவி இரவீந்திரன் அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்துரை இரவீந்திரனின் அன்பு மனைவியும் பொன்னுத்துரை — இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சின்னத்துரை — இராசமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் பிரசாத், ஜெயகரன், சிந்து என அன்பாக அழைக்கப்படும் வனிதா ஆகியோரின் அன்புத் தாயாரும் சேனாதிராஜா, செல்வராணி சகுந்தலா, செல்வராசா (கனடா), சௌந்தரராசா (ஹொலண்ட்), கிருஷ்ணகுமார் (சுவிஸ்), தங்கராசா, அமுதா (கனடா), அரியமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும் பத்மாவதி, காலஞ்சென்ற மோகனாம்பி, இரகுநாதன், வேதவாணி, இரஞ்சினிதேவி (ஜேர்மனி), இராஜ்குமார் (லண்டன்), நந்தகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று (20-7-99) காலை 10.00 மணிக்கு இல.41, ராங்லேன் (Tank Lane) இறம்பைக்குளம் வவுனியாவில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

தகவல்:
சின்னத்துரை இராசமணி
(மாமி)

அரியாலை. (67592)


**பாலர் ஆசிரியராக பயிற்சி**

தகைமை:
க. பொ. த. சாதாரணதரம் அல்லது மேல்
தபாலில் 6 மாதங்களில் பயிலலாம்.
பாலர் ஆசிரியர்சங்கம்
கொக்குவில். (67591)

SHAMROCK
General Chemistry
திரு அன்பு
ஆரம்பம்: 21-07-99
புதன்கிழமை 5-00 p.m
G.A.Q. 2000
English
Mr. RaiRajesh B.A
TAMIL, HINDU. CHRIS.
ஆரம்பமாகியுள்ளது
(சி/8240)

**ராஜா**
யாழ்ப்பாணம்
பிரபுதேவா - கஜோல்
மற்றும் பலர் நடித்த
**மின்சாரக் கனவு**
10-30, 2-30
[சி/8190]

**நாகம்ஸ்**
சுன்னாகம்
பிரசாந் - ஐஸ்வர்யா
நாசர் நடித்த
**ஜீன்ஸ்**
காட்சிகள் 11.00, 2.00
[ புதிய நேரம் ]
21-07-99 முதல்
பாண்டியன்
[67554]


## சமய சந்நிதிகளில்

பாண்டியன்தாழ்வு புனித அன்னாள் திருவிழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது.

இந்த விழா தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும். பத்தாம் நாளான எதிர்வரும் ஞாயிறு திருநாள் திருப்பலி பூசை, மறையுரைத் தியானங்களை அருள்திரு லூயிஸ் பொன்னையா அடிகளார் வழங்குவார். (ஐ-74)

★ ★ ★

யாழ். குடாநாட்டில் உள்ள பெரும்பாலான சைவ சமய ஆலயங்களில் இன்று காலை ஆடி முதல் செவ்வாய்க் கிழமை விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகள் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 20

சூராவத்தை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த ஞாயிற்றுககிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

எதிர்வரும் 26 ஆம் திகதி வரை தினமும் காலை 9 மணிக்கும் மாலை 4 மணிக்கும் திருவிழா ஆரம்பமாகும். வசந்த மண்டபப் பூசை பகல் 11 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் நடைபெறும்.

(இ-4)

★ ★ ★

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லீகோரியார் தேவாலய நவநாள் உற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

31 ஆம் திகதி சனிக்கிழமை காலை திருநற்கருணை ஆராதனையும் மாலை திருப்பலி பூஜையும் இடம்பெற்று மறுநாள் ஒகஸ்ட் முதலாம் திகதி காலை 7.00 மணிக்கு திருநாட் பாடற் பலிபூஜையும் திருச்சொரூப பவனியும இடம் பெறும். (இ-117)

★ ★ ★

சாவகச்சேரி கற்குளி கந்தசாமி கோயில் அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெறும்.

ஜூலை 28 ஆம் திகதி உற்சவமூர்த்தி சப்பறத்தில் வெளி வீதியுலா டம்பெற்று உற்சவம் நிறைவுபெறும்.

(இ-117)

## நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

உதவி வைத்திய உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 27 ஆம் திகதி யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெறவுள்ளது.

இந்த நேர்முகப் பரீட்சைக்கு ஏழு பேர் அழைக்கப் பட்டுள்ளனர். அவர்களை நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு யாழ். ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

அவர்களின் பெயர் விவரம் வருமாறு:-

★ சி. ஸ்ரீரங்கன் — விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி, கரவெட்டி கிழக்கு.

★ திருமதி வி. வாசுகி — மே/பா. என்.பாக்கியநாதன், பாண்டியன்குளம் கிராம சேவையாளர் அலுவலகம்.

★ வை. செந்தூரன் — மீசாலை வடக்கு.

★ திருமதி சி. நடராசா — நெல்லியடி, கரவெட்டி.

★ திருமதி எம்.வி. நிரஞ்சன் — ''கந்தா இல்லம்'', வி.எம். பருத்தித்துறை.

★ செல்வி எல். ஜெயசாந்தி — ''அமுதசுரபி'' கச்சாய் வீதி, சாவகச்சேரி.

★ திருமதி கே. தேவதர்சினி — மீசாலை மேற்கு.

(ஐ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இராணுவத்துக்கு ஆள் சேர்ப்பு; குழப்பத்தில் பீஹாரில் 20 பேர் பலி!

புதுடில்லி, ஜூலை 20

பீஹார் மாநிலத்தில் தர்பக்கா சம்ஹா மாநிலத்தில் கடந்த சனியன்று இடம் பெற்ற இராணுவ ஆள் சேர்ப்பில் இடம் பெற்ற கலவரத்தில் 20 இளைஞர்கள் பலியானார்கள்.

அங்குள்ள விமானத்தளத்தில் இடம்பெற்ற ஆள் சேர்ப்பில் 40 ஆயிரம் இளைஞர்கள் பங்கு கொண்டனர்.

ஏழுநூறுபேரே தெரிவு செய்யப்படுவர் என்று அங்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து ஆவேசம் கொண்ட இளைஞர்கள் கலவரத்தில் குதித்தனர்.

அங்கு காவலுக்கு நின்ற பொலீஸ் கான்ஸ்டபிளின் துப்பாக்கியைப் பறித்த ஓர் இளைஞர் வேட்டுக்களைத் தீர்த்தார்.

இதையடுத்து இங்கு பொலீஸ் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் நெரிசல் ஆகியவற்றில் சிக்கி 20 இளைஞர்கள் உயிரிழந்தனர்.

(இ-3)

## தென்கொரியா எச்சரிக்கை

சோல், ஜூலை 20

வடகொரியா அணு ஆயுதப் பரிசோதனை நடத்தினால் வெளிநாட்டு உதவிகளை இழக்க நேரிடும் என தென்கொரியா எச்சரிக்கை செய்துள்ளது.

வெளிநாடுகளின் உணவு உதவி மற்றும் நிதி உதவி கிடைக்காத நிலையில் மக்கள் வாழ்வதற்கே வழி அற்ற நிலையில் வட கொரியா வீழ்ந்து விடும் எனவும் தென்கொரியா தெரிவித்துள்ளது. (இ-க)

உலக அரங்கில்

## சூட்கேஸுக்குள் பெண்ணின் சடலம்

லண்டன், ஜூலை 20

லண்டன் ஹீத்ரோ விமான நிலையத்தில் 3 ஆவது மாடியில் கார் தரிப்பிடத்தில் சூட்கேஸ் ஒன்றுக்குள் இருந்து இளம் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்துக்குரிய பெண் 20 வயது மதிக்கத் தக்கவர் என்றும் —

அவரது உடலில் கத்திக் குத்துக் காயங்கள் காணப்பட்டன என்றும் —

அராபிய அல்லது துருக்கிய இனத்தைச் சேர்ந்தவராக அந்தப் பெண் இருக்க வேண்டும் என்றும் — பொலீஸார் தெரிவித்தனர்.

அந்தப் பெண்ணின் உறவினர்களைப் பொலீஸார் தேடி வருகின்றனர்.

(இ-3)

## 20 வருடத்தின் பின்னர் ஈரான்-பிரிட்டன் உறவு

லண்டன், ஜூலை 20

கடந்த 20 வருடங்களாக சீர்குலைந்திருந்த பிரிட்டிஷ் —ஈரான் உறவு மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது.

ஈரானுக்கு பிரிட்டிஷ் தூதுவராக நியமனம் பெற்றுள்ள மிக்பொன்ட் தமது நியமனக் கடிதத்தை ஈரானிய அதிபரிடம் வழங்கி உள்ளார்.

பிரிட்டிஷ் பிரஜையான எழுத்தாளர் சல்மான் ருஷ்டிக்கு ஈரான் சமயத் தலைவர் மரண தண்டனை வழங்கும் அறிவிப்பை விடுத்ததை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையில் உறவு முறிந்தது.

கடந்த வருடம் ஈரானிய அரசு ருஷ்டிக்கு எதிரான மரண தண்டனையை விலக்கிக் கொண்டதை அடுத்து இரு நாடுஈளுக்கும் இடையில் உறவு துளிர்த்துள்ளது.

(இ-3)

## மலேசிய பிரதமர் பதவி விலகுவார்

கோலாலம்பூர் ஜூலை 20

மலேசியப் பிரதமர் மஹதீர் மொகமட் எதிர்வரும் பொதுத் தேர்தலின் பின்னர் பதவி விலகப் போவதாக அறிவித்துள்ளார்.

73 வயதுடைய மஹதீர் மொகமட் தொடர்ச்சியாக 18 ஆண்டுகள் பதவி வகித்துள்ளார்.

கடந்த வருடம் தாம் பதவி விலக நினைத்திருந்ததாகவும் முன்னைய துணை பிரதமர் தொடர்பான பிரச்சினை காரணமாக பதவி விலக முடியாது போய்விட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

(இ-9)

## ஈரானில் மாணவர் போராட்டம் தீவிரம்

### நசுக்குவதற்கு அரசு தீவிரம்

தெஹ்ரான், ஜூலை 20

ஈரானில் இடம் பெற்ற மாணவர் போராட்டத்தை நசுக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக ஈரான்அரசு அறிவித்துள்ளது.

மாணவர்கள் அமெரிக்கப் பின்னணியில் செயற்படுவதாக அரசு குற்றஞ் சாட்டியுள்ளது.

அதே நேரம் — ஆயிரத்து 500 மாணவர்களை ஈரான் அரசு கைது செய்து சிறைகளில் அடைத்துள்ளது என்றும் —

மாணவர்கள் அரசுக்கு எதிரான போராட்டத்தைத் தீவிரமாக்கப் போகின்றனர் என்றும் — மாணவர் அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

[இ - 3]

## ஊடுருவலைத் தடுக்க எலக்ரோனிக் சாதனம்

### எல்லையில் இந்தியா பொருத்தும்

புதுடில்லி, ஜூலை 20

இந்திய எல்லைப் பகுதியின் ஊடாக எவரும் ஊடுருவுவதைத் தடுக்க எலக்ரோனிக் சாதனங்களைப் பொருத்த இந்திய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

போர் முக்கியத்துவம் வாய்ந்த மலைகளில் படையினர் தொடர்ந்து நிலைகொள்ளவும் ஏற்பாடாகியுள்ளது

எல்லைக் கோட்டைப் பாதுகாக்க விசேட படையினரைப் பணியில் ஈடுபடுத்தப்போவதாக காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தெரிவித்துள்ளார்.

அதேநேரம்— கடந்த சண்டையில் பாகிஸ்தான் தரப்பில் 41 அதிகாரிகளும் 698 சிப்பாய்களும்—

இந்தியத் தரப்பில் 24 அதிகாரிகளும் 410 சிப்பாய்களும் உயிரிழந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

[இ-3]

## பாக் ஊடுருவல்காரரிடம் இரசாயன ஆயுதங்கள்?

### இந்தியா சந்தேகம் தெரிவிப்பு

புதுடில்லி, ஜூலை 20

இந்தியாவுக்குள் ஊடுருவியிருந்த பாகிஸ்தான் படையினர் இரசாயன ஆயுதங்களை வைத்திருந்தமைக்கான ஆவணச்சான்றுகள் கிடைத்திருப்பதாக இந்தியா தெரிவித்துள்ளது.

ஊடுருவல்காரர்கள் வெளியேறியதை அடுத்து தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள இந்தியப் படையினர் ஹட்சர்பிரதேசத்தில் இருந்து அணு ஆயுதங்களைப் பாவிக்க மட்டும் பயன்படுத்தப்படும் முகமூடிகளைக் கைப்பற்றியுள்ளனர் என்றும் —

ஊடுருவல்காரர்கள் ஏதாவது அணு ஆயுதங்களைக் கைவிட்டுச் சென்று இருக்கலாம் எனக் கருதி அவற்றைத் தேடும் பணியில் படையினர் ஈடுபட்டுள்ளனர் என்றும் — இந்திய அதிகாரிகள் தெரிவித்தார்.

இந்தியாவிடம் அணு ஆயுதம் இல்லை என்றும் —

பாகிஸ்தானிடம் அணு ஆயுதங்கள் உள்ளன என்பது தற்சமயம் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் — இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

(இ-3)

## எதிரணியின் கட்டுப்பாட்டில் ஆப்கானின் வடபகுதி

காபூல், ஜூலை 20

ஆப்கானிஸ்தானில் தாம் மேற்கொண்ட அதிரடித் தாக்குதலில் மேற்குப் பகுதி தமது கட்டுப்பாட்டில் வந்துள்ளதாக ஆப்கன் எதிரணிப் படையினர் அறிவித்துள்ளனர்.

ஆப்கனில் வடபகுதியில் நிலை கொண்டுள்ள எதிரணியினர் தமது தாக்குதலில் 00 தலிபான் படையினர் கொல்லப்பட்டதாகவும் தெரிவித்துள்ளனர்.

அதே நேரம் — ஆப்கன் நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக ஐ நா ஏற்பாட்டில் தாஷ்கண்ட்டில் சமாதானப் பேச்சுக்கள் இடம் பெறவுள்ளன என்றும் —

இதற்கு தலிபான் அமைப்பினதும், எதிரணியினதும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டுள்ளனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது. (இ 3)

## கைது

லண்டன் ஜூலை 20

பிரிட்டிஷ் மகாராணி எலிசபெத்தின் பாக்கிங்காம் அரண்மனையில் கடந்த வாரம் அத்துமீறி நுழைந்த நபரை பொலீஸார் கைது செய்துள்ளனர்.

## நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ரூ. 10லட்சம் செலவில்விவசாயதிட்டம்

வலி. கிழக்கு, ஜூலை 20

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 40 கிராம சேவையாளர் பிரிவுகளில் 10 லட்ச ரூபா செலவில் விவசாசாயம் சம்பந்தமான சிறு திட்டங்களைச் செயற்படுத்த வடக்கு — கிழக்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.

இத்தகைய திட்டங்கள் விவசாயத் திணைக்களம் மூலம் நடைமுறைப்படுத்தப் படவிருப்பதாக தெரிய வருகின்றது.

வீட்டுத்தோட்ட அபிவிருத்தியை மேம்படுத்தும் முகமாக விவசாயக் கிணறுகளைத் திருத்துவது வீட்டுப் பாவனையில் உள்ள கிணறுகளைத் திருத்துவது, தேனீர் வளர்ப்பு, வீட்டில் சிறு தோட்ட பழமர செய்கைக்கான ஊக்குவிப்பு,உபகரணம் வழங்கல் போன்ற திட்டங்களே மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்தத் திட்டம் வடக்கு — கிழக்கு புனர்வாழ்வு அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாண சபை நிதியில் இருந்து மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கான விவரங்களை உடன் திரட்டுமாறு பிரதேச செயலர் சகல கிராம சேவையாளர்களுக்கும் அறிவித்துள்ளார். [இ-180]

## 571 பேருக்கு சான்றிதழ்

சாவகச்சேரி, ஜூலை 20

யாழ். பல்கலைக்கழகத்தின் புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய அலகில் நடைபெற்ற பயிற்சி நெறியில் 571 பேர் பயிற்சி பெற்று சான்றிதழ்களைப் பெற்றுள்ளனர்.

புறநிலைப் படிப்புகள் அலகின் தென்மராட்சிப் பிராந்திய அலகு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கி வருகின்றது.

தொடர்பியலுக்கான ஆங்கிலக் கல்வி கற்கை நெறியில் 239 பேரும்

அலுவலக முகாமைத்துவம் நெறியில் 78 பேரும்.

தொழில் புரிவோருக்கான உயர்தர ஆங்கில கற்கை நெறியில் 40 பேரும்.

நில அளவையியலும் படவரைக்கலையும் நெறியில் 72 பேரும்.

கல்வி மேம்பாட்டுப் பயிற்சி நெறியில் 38 பேருமாக மொத்தம் 571 பேர் அடங்குவர்.

தொடர்ந்தும் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த கற்கை நெறிகளில் விரும்பும் கற்கைநெறிகளைத் தெரிவு செய்து 40 பேர் கொண்ட அணியினர் தொடர்பு கொண்டால் அந்த பயிற்சி நெறியை நடத்துவது தொடர்பாக பரிசீலித்து அப்பயிற்சி நெறியை நடத்த ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

[இ-31]

## குருபூசை

சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை புதன் கிழமை கைதடி மத்தி வாலாம்பிகை அம்பாள் ஆலயத்தில், கைதடி சைவஐக்கிய சங்கத்தின் ஆதரவுடன் நடைபெறும்.

ஏழாந்திருமுறைப் பண்ணிசைப்போட்டியில் முதல்பத்து இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கு சங்கத் தலைவர் வ. சுப்பையா புத்தகங்கள் பரிசாக வழங்குவார்.

இ-(47)


சுகாதார திணைக்களம்

யாழ்ப்பாணம்.

அறிவித்தல்

முறைப்பாடு செய்பவர்களுக்கு

யாழ். சுகாதார திணைக்களத்துக்கு உட்பட்ட நிறுவனங்கள், ஊழியர்கள் பற்றி அண்மையில் பல அநாமதேய முறைப்பாடுகள் வருகின்றன. முறைப்பாடுகள் செய்பவரின் பெயர், விலாசம் ஆகியவற்றை குறிப்பிட்டு அனுப்பினால்தான் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க முடியும்.

சில பொய்யான முறைப்பாடுகளும் வருகின்றபடியால் எதில் உண்மை உள்ளது என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தாலன்றி நடவடிக்கை எடுக்க முடியாது என்பது எல்லோருமறிந்த உண்மை.

தற்போதுள்ள கஷ்டமான சூழ்நிலையில் நிர்வாகம் பாரபட்சமின்றி நடக்க வேண்டுமாயின் இது அவசியம்.

ஆனபடியால் அநாமதேய முறைப்பாடுகள் அனுப்பாமல் விசாரணைக்கு உதவுவதற்கு பெயர், விலாசம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு முறைப்பாடுகளை அனுப்பும்படி எல்லோரையும் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

வைத்திய கலாநிதி
க. தா. சிவபாதம்
பதில் மாகாணப் பிரதிப்பணிப்பாளர்,
சுகாதார சேவைகள்,
யாழ்ப்பாணம்.

(சி/8239)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சோமபாலன் றவீவ் என்பவருடைய விசேட அடையாள அட்டை (0907002761) திருநெல்வேலி இராமநாதன் வீதிக்கும், யாழ். பல்கலைக் கழக வளாக வீதியிலுள்ள இந்து அக்கடமிக்கும் இடையில் 18 - 7 - 99 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி அல்லது சிறி ரூபா ஜுவல்லர்ஸ், 131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (67576)

இல. 69, 5 ஆம் ஒழுங்கை அரசடி வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருநாவுக்கரசு உதயகுமார் என்பவரது விசேட அ. அட்டை, தேசிய அ. அட்டை (692672453V) இரண்டும் 17-7-99 இல் யாழ்ப்பாணத்துக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (67583)

## வீதிகள் திருத்தம்

கொழும்புத்துறை, ஜுலை20
யாழ். நகர வீதிகள் சில திருத்தம் செய்யப்பட்டுள்ளன.

வேம்படி வீதி, மடம் வீதி, சோமசுந்தரம் அவனியூ வீதி, கோவில் வீதி ஆகியன திருத்தப்பட்டுள்ளன, ஏனைய வீதிகளுக்கு கற்கள் பறிக்கப்பட்டுள்ளன. (ஐ-30)

## ஜெபம்
## பரிசுத்த ஆவிக்கு

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப் படுவதாக. உமது அருட்கொடைகளின் மூலம் என் உள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்கு தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச் சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகிறேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மில் இருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேன் என உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்கு பெற வேண்டுகின்றேன்.

ஓ பரிசுத்த ஆவியே உமக்கு நன்றி.

D. P.

(67587)

### கையேடு

''பரீட்சைக்கான ஆயத்தமும் அவற்றை வெற்றிகரமாக எதிர்கொள்ளலும்'' பிரபல உளவியல் அறிஞர்களால் எழுதப்பட்டது. தனிப்பிரதி தேவையானோர் முப்பது ரூபா முத்திரை அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம். முகவரி: ஜோ. எகட்டன் 19/3, கொழும்புத்துறை வீதி, (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி எதிர் ஒழுங்கை) சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (67507)

### தேவை

இறைச்சிக்கோழிகள் தேவை. நல்லவிலை கொடுக்கப்படும். தனபாலசிங்கம் (19, முருகேசர் ஒழுங்கை நல்லூர் வீடியோ சென்ரர், வளவு) முத்திரைச் சந்தையடி, நல்லூர். (67579)

### யாழ்ப்பாணம்

ஞாயிறு இரவு 9.00மணிக்கு யாழ்சேவையில் பொறாமை நாடகம் கேட்டீர்களா? அதை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்1. யாழ்ப்பாணம் சிறுகதைத் தொகுப்பு 2. யாழ்ப்பாணமா? கொழும்பா? நாடகநூல் ரூபா 50.

(57684)

### விவாக சேவை

சைவ, அசைவ, உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களைத் தேர்ந்தெடுக்க மாவை விநாயகர் விவாக சேவை. புதன் கிழமை— 111/3, கோயில் வீதி, நல்லூர். ஞாயிறு— மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் மடம்.

(67568)

### ஆங்கிலக் கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் நேசரி (Nursery) வகுப்பிலிருந்து O/L இற்கு அப்பாலும் தனிப்பட்ட முறையிலும், வீடுகளுக்கு வந்தும் கற்பிக்கப்படும். நேரில் அல்லது கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். ஆங்கில ஆசிரியர் 204, மானிப்பாய் வீதி, ஓட்டுமடம், யாழ்ப்பாணம், (67570)

### தவறிவிட்டது

சாவகச்சேரி இலங்கை வங்கிக்கு முன் பாதையூடாக மட்டுவில் அம்மன் கோயில் பின் வீதிக்கிடையில் 13 - 07 - 99 இல் உடுப்புப் பொதி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் முகவரிக்கு அறிவிக்கவும். சீ. கந்தசாமி, சிறுப்பிட்டி மேற்கு நீர்வேலி, (இராஜ வீதி). (67578)

## அசேதன இரசாயனம்

தொடர்பான
மூன்று நூல்கள்
வெளிவந்துள்ளன

1) தாக்கங்கள்
2) பண்பறிபகுப்பு
3) தொழில் முறை இரசாயனம்

ஆக்கம்
திரு. மகாதேவன் B.sc.

## ஸ்ரீ லங்கா புத்தகசாலை

(67588)

## அந்தியேட்டி அழைப்பு

தோற்றம்: 01 — 03 — 1918



மறைவு: 21 — 06 — 1999

அமரர்
## வேலுப்பிள்ளை சின்னத்துரை
(இளைப்பாறிய சுகாதாரப் பரிசோதகர், பிரபல சோதிடர்)

அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நாளை [ 21 — 07 — 1999 ] புதன் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது இதில் கலந்து கொண்டு நண்பகல் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு பற்றுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி தேவஜோதி குலநாயகமும்
சகோதரர்களும்.

49, இராஜ வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[சி/8232]

யாழ். மாவட்ட
## வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்
## 1999 ஆம் ஆண்டுப் பொதுக்கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்

எமது யாழ். மாவட்ட வர்த்தகர் சங்கங்களின் சம்மேளன 1999 ஆம் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நிர்வாக சபைத் தெரிவும்
08—08—99 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 10.30 மணிக்கு (புதிய நேரம்)
ஜும்மாப் பள்ளிவாசல் ஒழுங்கையில் அமைந்துள்ள
''சிற்றி ஹோல்'' மண்டபத்தில்
(மலாயன் பென்சனியர் கட்டடம்) நடைபெறும்.

எமது சம்மேளனத்தில் அங்கத்துவம் வகிக்கும் வர்த்தகர் சங்கங்கள் அனைத்தும் குறித்த நேரத்தில் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

வே. திருநாவுக்கரசு
செயலாளர்,
யாழ். மாவட்ட
வர்த்தகர் சங்கங்களின் சம்மேளனம்.

இல. 27, நவீன சந்தை [மேல்மாடி],
,யாழ்ப்பாணம். [சி/8234]

## 11 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## நன்றி நவிலலும்

தாயின் மடியில் 10 — 06 — 1919



இறைவன் அடியில் 08 — 07 — 1999

## அமரர் சிவஸ்ரீ சுந்தரக்குருக்கள் சோமாஸ்கந்தக்குருக்கள்
( முன்னாள் பிரதமகுரு, ஸ்ரீ கொத்துக்குளம் மாரியம்மன் தேவஸ்தானம், ஊரணி, மட்டக்களப்பு )

தெய்வமென வாழ்ந்தெம்மைச் சிறப்புடனே
வாழ வைத்தாய்
உய்ய வழி காட்டி உயர்வித்தாய் எம் குடும்பம்
பொய்யாமல் அன்பு மழை பொழிந்தாயே
எந்நாளும்
ஐய! நீ மறைந்தாலும் அழியாது உன் நினைவு.

08 - 07 - 1999 அன்று சிவபதமடைந்த எம் அன்புத் தெய்வத்தின் இறுதிச் சடங்குகளில் பங்கு பற்றியும், இரங்கலுரை நடத்தியும், மலர் அஞ்சலி செலுத்தியும், அனுதாபச்செய்தி அனுப்பியும், இறுதிச் சடங்கு ஒழுங்குகளை மேற்கொண்டும், நாம் கலங்கியிருந்த வேளை எமக்குப் பக்கபலமாக இருந்து இன்னோரன்ன பல உதவிகளைச் செய்து எமது துயரில் பங்கு கொண்ட உற்றார், உறவினர், ஊரவர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நல் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

மனைவி, மக்கள்.

கீதா தோட்டம்,
புற்றளைப்பிள்ளையார் கோவிலடி,
புலோலி தெற்கு,
புலோலி.

[ 67585 ]

## மிற்சுயி (MITSUI), அட்லஸ் (ATLAS) சிமெந்து வகைகள் இன்று விற்பனைக்கு வருகின்றன

மிற்சுயி (MITSUI) - 525 ரூபா (மொத்தவிலை)
அட்லஸ் (ATLAS) - 500 ரூபா (மொத்தவிலை)

தொடர்பு:
## ஜெசிபா ஏஜென்ஸி
132, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 2407

[சி/8235]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானப் பயண பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரம்

யாழ்ப்பாணம்

பீ. ராகவன் (104470 ஏ), வி. இளங்குமார் (104472ஏ), எஸ். தவேந்திரன்(10443ஏ), என்.கே பீ. குரகதி(104474ஏ) பீ.ஐ. ஸ்கந்தரூபன் (104474 பீ), பீ. கே. சிறீ கந்தராசா தில்லை (104474சீ) எஸ்.எம். குருக்கள் (104475ஏ), ஏ. கதிரவேலு (104476ஏ), எவ். எச். பெனாண்டோ (104478 ஏ), ஆர். மொசாம்(104479 பீ) என். மொசாம்(104479 பீ), எஸ். குவின்ரஸ்(104480 ஏ), ரீ. மோகன்பாலா (104481 ஏ), ரீ. சக்திகுமாரன்(104481 பீ), ரீ உமையாஸ் (104481 சீ), ஏ. கமலவேணி (104481 டீ), எஸ். சிவபுரநாதன் (104487ஏ), டாக்டர் ஏ.என். பிரசாத் (104489ஏ), எஸ். கந்தையா (104493ஏ), எஸ். சாந்திவேலு (104499ஏ), எஸ். தமணிதேவி (104499 பீ), எஸ். சஜீவன்(104499சீ),

எஸ். பரமேஸ்வரராஸ் [104500ஏ], ஆர். நாகரட்ணம் [104501ஏ], எஸ். சுந்தரலிங்கம் [104502ஏ]. பீ. ஜோன் [104506ஏ], ஏ. பிரான்சிஸ்[104508ஏ], எவ் டீ. ரிகாஸ் [104508பீ], ஜே. ஜே. புவிராஜசிங்கம் [104509ஏ], ஆர். சண்முகலிங்கம் [104510பீ], எஸ். சரவணபவாநந்தா [104511 ஏ], எம். சாமி [104512ஏ], எம். சண்முகலிங்கம் [104510 பீ], ஏ. அன்றா [104513 ஏ], வீ. கமலாவதி [104516 ஏ], வீ. ஜதிடன் [104516 பீ], ஆர். சாந்தன் [104520 ஏ], என். வை. குருக்கள் [104524ஏ], எஸ். லோகநாதன் [104525ஏ[, எஸ். கமலம் [104526ஏ], கே. டீ. குமார் [104528ஏ], எம். சிவபாக்கியம் [104543 ஏ], ஏ. மறிஸ்ரலா [104544 ஏ],.

பீ. கங்காதரன் (104545 ஏ), வீ. றொசாறி (104547 ஏ), எம். சுரேகா (104547 பீ), ஏ. கியூ. சீ. பிரான்சிஸ் (104548 ஏ), சீ. எஸ். ஆப்கன் (104548 பீ), எல். ஈ. மரியதாசன் (104550 ஏ) எம். எம். மரியதாசன் [104550 பீ], ஆர். அருணபலம் [104551 ஏ], ஆர். பத்மாவதி (104551பீ), வை. சுபாசேகரம் (104552 ஏ), ஆர். சோமநந்தன் (104554 ஏ).

என். எஸ். வீ. சர்மா [104555 ஏ], வீ திவாகேஸ்வரர் (104555 பீ), கே. குகச்செல்வி [104556 ஏ], ஜே. கண்ணதாசன் [104659 ஏ], கே. பரமானந்தன் [104559 பீ], கே. ராஜலக்சுமி (104561 ஏ) யூ. டபிள்யூ. தர்மசிறி [104563 ஏ], டாக்டர் அருமைநாயகம் [104564 ஏ], ஏ. டீ. தபகாசன் [104565 ஏ], எம் மறிஸ்ரெலா (104571 ஏ).

எம். ஞானபூபா (104571 பீ), ஆர். அன்ரனி (104571 சீ), வீ. தலயசிங்கம் (104572 ஏ), ரீ. மகேஸ்வரி (104572 பீ), என். இந்திரன் (104574 ஏ), ஜே. அன்ரன் (104575 ஏ), எம். ஜோசப்பின் (104575பீ), மாரிக் (104575 சீ), வை. விலியோனர் (104576ஏ), ரீ. பத்மதேவி (104573ஏ), ரீ. தனஞ்சன் (104573பீ), ஏ ஆர். ஜெயகௌரி (104578சீ),

ஏ. ஆர். நிஷாந்தா (104578 டீ). ஆர். பிரியதர்ஷனி (104579ஏ), ஆர். செல்லையா (104582ஏ), சீ. ரி. ரட்ணசிங்கம் (104588பீ), ஏ. சிவனேந்திரன்(104583ஏ), எஸ். சுப்ரமணியம் (104584ஏ), எஸ். ஜீ. ஆனந்தம் (104587 ஏ), ஜே. விஜிதா (104587 பீ), ஜே. தனுஷன் (104587 சீ), ஜே. றனுதன் (104587 பீ), ஜே. கோபிஷா (104587 ஈ),

சி. தங்கவேலு (104589 ஏ), ரீ. அருணகிரிநாதன் (104590ஏ), ஜே. கே. வல்லிபுரம் (104591ஏ), ஏ. சுதானி (104592ஏ), ஏ. தவமணி (104592பீ), ஏ. ரவிக்குமார் (104593ஏ), ஏ. தங்கேஸ்வரன்(104595ஏ), எஸ். தங்கேஸ்வரன் (104595பீ), ஏ. தங்கேஸ்வரன் (104595சீ), ரீ. சங்கீதா (104595டீ), ரீ. பிரியந்தன் (104595ஈ), ரீ சுப்ரமணியம் (104595எவ்), ரீ. ஜே. குணராஜா (104597 ஏ), ஜே. ஜே. நிவேன் (104597பீ), ஜே. சீ. நிரஞ்சன்(104597சீ), ஜே. நியோமி (104597டீ), ரீ. வல்லிபுரம் (104598ஏ), எஸ். ஜெகசோதி (104600ஏ), ஏ. சற்குணராஜா (104304ஏ).

எஸ். யுடிற்றா [104606ஏ], எஸ். தம்பிராஜா [104610 ஏ], ஏ. எஸ் கமலேஸ்வரி [104618ஏ], எஸ். கமலா [104620ஏ], எஸ். மகேந்திரன் [104621ஏ], எம். கீதா [104621பி], பி. கே. பிரதிப் வர்மா [104622ஏ], பி. சர்மா [104622பி], ஜே. கிருபாகரன் [104623ஏ], ஜே. கிரிதரன் [104623பி], கே. அருளய்யா [104624 ஏ], ஏ. இளங்குமரன் [104624பி], கே. ராசலிங்கம் [104625ஏ], பி. சிறிதரன் [104626ஏ], பி. அந்தோனிப்பிள்ளை [104627 ஏ] ஏ. மனோஜ்குமார் [104627பி], ஏ. ரஜிதாகுமார் [104627சி], ஆர். திலோகநந்தன் [104628ஏ], என். நர்மதா [104632ஏ].

என். எல். துரைசிங்கம் (104632பீ), லோகநாயகி (104632சீ), ஈ. கருணாகரன் (104733ஏ), எஸ். சின்னம்மா (104637ஏ), கே. தங்கராசா (104639ஏ), ரீ. தீபன்(104639 பீ), எம். கிறிஸ்தன் (104640 ஏ), ரீ, குணசேகரம் (104641 ஏ), எல். ஏ குரூஸ்(104642ஏ), ஏ. எஸ். குரூஸ் (104642சீ), எ. வீ. குரூஸ் (104642பீ).

என். யோகேந்திரன்(104643 ஏ), வை. நிறோஜன் (104643 பீ), எல், யோகாதன்(104643 சீ), என். வரதராசா(104645 ஏ), கே. சிவநேசன் (104646 ஏ), ஆர். தம்பையா(104647 ஏ), ஆர். லிங்கேஸ்வரி(104647 பீ), ஜே. எம். ஜெயசிந்தன் (104649ஏ), ஜே. நெயந்தி (104649பீ), ஏ ராசிக் (104650ஏ).

ஜே. ஜெகதீஸ்வரி [104651 ஏ], கே. பாலசிங்கம் [104654 ஏ], என். வீரசிங்கம் [104655 ஏ], எஸ். சாந்தகுமார் [104657 ஏ], எஸ். சுரபி [104657பி], டாக்டர் சிவஞானம் [104659 ஏ], வை. கந்தையா [104660 ஏ], எம். சிவராசா [104662 ஏ], ஆர். பதானந்தன்[104663 ஏ], டாக்டர் என். கனகரட்ணம் [104663 பி], கே. நாகலிங்கம் [104663சீ], டாக்டர் என் கனகரட்ணம் [104663 டீ], கே. நாகலிங்கம் [104663 எவ்], ஆர். பத்மநாதன் [104663ஈ], டாக்டர் எஸ். ரவிராஜ் [104664 ஏ], ரீ. மகாதேவன் [104665ஏ] ரீ. மகாதேவன் [104665பி], தர்மகுலசிங்கம் [104667ஏ], எஸ். சிறிஸ்கந்தராசா [104668ஏ], எஸ். கிறிஸ்ணகுமார் [104668பி], எஸ் விதுர்ஷன் [104668சீ], ஏ. எவ். லொசிரென்ஸ்[104670ஏ], கே. சூரியபகவதி [104671ஏ], ஜே. ராஜரட்ணம் [104672ஏ]

கே. நடராசா [104675ஏ], ஜே. லீலானந்தன் [104679ஏ]. ஈ. மகாலக்சுமி [104680ஏ], மயூறன் [104680பி], மிதுனா [104680 சீ], ஆர். ஜெயசேகரம் [104681ஏ], எவ் ஈ. ஆர். ஜேசீ. போல் றொகான் [104682ஏ] எம். கனகரட்ணம் [104683ஏ], எஸ். ராஜேந்திரன்[104684ஏ], எஸ். ராஜேந்திரன் [104684பி], ஏ. கந்தையா [104684சீ[.

ஏ பீ. அலிஸ்ரன் [104687ஏ], எஸ் சஞ்சீவன் [104688 ஏ], ஏ. கே. எட்வட் [104689ஏ], ஏ. தேவராஜினி [104689பீ]. எச். ரட்ணசிறி பெரேரா [104691 ஏ], ஜே. கே. வலன்ரினா [104692 ஏ], எஸ். ஜெயபாலசிங்கம் [104698 ஏ], ஜே. சாந்தி [104698 பீ], ஜே. ஜெயரட்ணம் [104698 சீ], வீ. சாம்பசிவன் [104700ஏ], ஆர். ரட்ணராசா [104701ஏ], ஆர். ரட்ணராஜா [104701 பீ], ஆர். றதினி [104701 சீ], கே. ராஜேஸ்வரன் [104702ஏ,] சீ ராஜரட்ணம் [104703ஏ], கே. சரவணை [104704 ஏ], ரீ. ராஜினி [104705 ஏ], எஸ். சின்னம்மா [104706ஏ] எஸ். சசிகுமாரி [104708 ஏ], எஸ். ராஜேஸ்வரி [104708 பீ].

எஸ். கிருஷ்ணவேணி (104708சீ), எஸ். மாதவன் (104708டீ), பீ. காசிநந்தன் (104709ஏ). எஸ். பாலசுந்தரம் (104710ஏ), ஆர். நீதரன் (104711ஏ) எம் ஏ. இங்கினியாஸ் (104712 ஏ) வீ. ராஜேஸ்வரம் (104715 ஏ), ஆர். பரோதரமன் (104715பீ) டாக்டர் டபிள்யூ ஜே. சோமசுந்தரம் (104716 ஏ). எம். கணேசானந்தன் (104717ஏ),

பி. குருபாலன் (104717பீ) எவ். ஜே. ஈ. செல்வராஜா (104721 ஏ), டீ. முத்துராஜா (104723 ஏ) எவ். ஆர் கேஜெ ஜெயக்குமார்(104727 ஏ) ஆர். செல்வராஜா[104729 ஏ], ரீ. றேமசந்திரா [104730 ஏ], வீ ரீ. சம்பந்தன் [104732 ஏ]. ஏ. ஈ, பங்கிராஸ் ]104733 ஏ], ஏ. சுவாமிப்பிள்ளை [104737 ஏ], பீ. கே. ரஞ்சித் [104740 ஏ].

சீ. போகராணி (104741ஏ), சீ. நியூற்றன் (104741பீ), சீ. எட்பட் (104741சீ), சீ. நிரோசா (104741டீ). எஸ். சண்முகதாசன் (104744ஏ), பீ தம்பிராஜா (104746ஏ), ரீ. தம்பிராஜா [04746பீ), ரீ. ரட்னேஸ்வரி (104748ஏ), எஸ். லக்சுமிகாந்தன் (104749ஏ), ஏ துரைச்சாமி (104750ஏ), ஜே. சலோமை (104751ஏ).

பீ. பவித்ரா (104752ஏ), ஜே நாகராசா (104753ஏ), கே. ரட்ணம் (104753பீ), கே. பவித்ரா (104753சீ), கே. கோகுலன் (104753டீ), கோபிகன் (104753ஈ). டாக்டர் வீ. எஸ். பிரியநாகனி (104755ஏ), ஏ. ஜே வின்ஸ்ரன் (104756ஏ), ஏ. ஏ. அரசலா (104761ஏ). கே. விஜயரட்ணம் (104762ஏ), வீ. ரசியா (104762பீ).

என் ராசகுரு (104764ஏ), என். அருபரன் (104766ஏ), கே. வேலுப்பிள்ளை 104767 ஏ), எஸ். சபாரட்ணம் 104768 ஏ), ஏ. திருச்சிவம் (104769 ஏ), கே. வரதராஜா (104771 ஏ), எஸ். கிருஷ்ணகுமார் (104772 ஏ), ரீ. தியாகேசபாய் (104776 ஏ), கே. சரோஜினிதேவி (104776 பீ), ஜயக்குமார் (10477 ஏ), ஆர். செல்லத்துரை(104779ஏ)

[ தொடரும் [

## குளங்களைத் திருத்த உதவுமாறு கோரிக்கை

வலி. தென்மேற்கு, ஜூலை 20

உலக உணவு விவசாயத் திட்டத்தின் கீழ் நவாலிப் பகுதியில் 5 குளங்களைத் திருத்துவதற்கு உதவுமாறு நவாலி விவசாயிகள் சம்மேளன செயலாளர் உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தரைக் கேட்டுள்ளார்.

கடந்த காலங்களில் வேடுவன் கட்டி, உலவிக்குளம் போன்றவை உலக உணவு விவசாயத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. (இ-185)

## சைவசமய அறிவுப் போட்டி

சண்டிலிப்பாய், ஜூலை 20

வடலியடைப்பு புதறாளை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றத்தின் அறநெறிக் கழகம் சைவ சமய அறிவுப் போட்டி ஒன்றை இம்மாதம் 31 ஆம் திகதி நடத்தவுள்ளது. (இ-135)

## வெற்றிடம்

வலி. தென்மேற்கு ஜூலை 20

வடக்கு — கிழக்கு மாகாண திட்டமிடல் பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகத்தில் 10 பட்டதாரி பயிலுநர் பதவிகளுக்கு வெற்றிடம் உள்ளதாக பிரதிப் பிரதம செயலாளர் திட்டமிடல் அதிகாரி எஸ். ரங்கராஜா தெரிவித்தார். (இ-185)

## மரணம்

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா கோயில்குளத்தில் இடம்பெற்ற சைக்கிள் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்து கண்டி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வந்த புளொட் உறுப்பினர் பார்த்தீபன் [நடராசா நவரத்தினம் — செக்கட்டிப்புலவு) மரணமாகி விட்டார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குண்டு வெடிப்பில் உயிரிழந்த புளொட் அமைப்பின் விசேட தளபதி பாஸ்கரனின் மெய்ப்பாதுகாவலரான இவர் படுகாயம் அடைந்த நிலையில் அநுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் கண்டி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு மரணமானார் என்று தெரிவிக்கப்பட்டது.

அவரது சடலத்தை வவுனியாவுக்கு எடுத்து வர ஏற்பாடாகியுள்ளது. (இ-3)

## கூட்டுறவுச் சபைக்கு 'பக்ஸ்' வசதி

திருநெல்வேலி, ஜூலை 20

யாழ், மாவட்ட கூட்டுறவுச் சபையின் தலைமை அலுவலகத்துக்கு பக்ஸ் இயந்திரம், போட்டோ பிரதி எடுக்கும் இயந்திரம் என்பன கொழும்பிலுள்ள கூட்டுறவு அமைச்சினால் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்பி லிருந்து கப்பல் மூலம் இங்கு இவை விரைவில் எடுத்து வரப்படவுள்ளன என்று சபையின் செயலாளர் ஸ் சிவ சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ-135)

## முட்டை விலை அதிகரிப்பு

வலிகாமம் தெற்கு, ஜூலை 20

குடாநாட்டில் முட்டையின் விலை அதிகரித்துள்ளது.

ஆறு ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை ஒன்றின் விலை தற்போது 8 ரூபா 50 சதமாக உயர்ந்துள்ளது.

குடாநாட்டில் தற்போது நிலவும் காலநிலை காரணமாக கோழிகள் முட்டை இடுவது குறைவடைந்திருப்பதாக கோழிப் பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர். [இ-152]

## படையினரை வாபஸ் பெற்று பதிலாக அதிரடிப்படை

மன்னார், ஜூலை 20

மன்னார் — தலைமன்னார் வீதியில் புதுக்குடியிருப்பில் அமைந்திருந்த இராணுவ முகாமில் இருந்து படையினர் வாபஸ் பெறப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

அந்த முகாமில் இருந்த படையினர் மன்னார் நகருக்கு கொண்டுவரப்பட்டுள்ளனர் என்றும் — மன்னார்—பூநகரி பாதையைத் திறக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக எதிர்பார்க்கப்படும் இராணுவ நடவடிக்கையில் இவர்கள் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் — கூறப்படுகின்றது.

அதேநேரம் — புதுக்குடியிருப்பு முகாமில் விசேட அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். (இ-3)

## யாழ்ப்பாணம் வருவதற்காக 6 ஆயிரம் பேர் பதிவு

திருகோணமலை, ஜூலை 20

யாழ்ப்பாணத்துக்கு வருவதற்காக ஆறாயிரம் பேர் திருமலை பட்டணமும், சூழலும் பிரதேச செயலகத்தில் பதிவு செய்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அரச ஊழியர்கள் மற்றும் சொந்தப் பணிகளுக்காக தெற்கே சென்றவர்கள் என 6 ஆயிரம் பேர் பதிவு செய்துள்ளனர் என்றும் —

அடுத்த தடவை லங்கா முடித்த கப்பல் சேவையில் ஈடுபடும் போதே அவர்களுக்கு இடம் அளிக்க முடியும் என்றும் — செயலக அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதேநேரம் — இந்தக் கப்பல், பயணிகள் சேவையை இடைநிறுத்தி விட்டு கொழும்பு சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ - 3)

## வீதி ஓர மரங்கள் வெட்டப்படுகின்றன

சண்டிலிப்பாய், ஜூலை 20

பண்டத்தரிப்புப் பகுதியிலுள்ள வீதிகளில் வேலி ஓரங்களில் நிற்கும் மரங்கள், கதியால்கள் என்பன வெட்டப்பட்டு வருகின்றன. வீதி ஓரங்களில் உள்ள சிறுபற்றைகள், புற்கள் என்பனவும் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (இ-135)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆசிரியர்களுக்கான

# இடர்க்காலக் கொடுப்பனவுக்கு

## 10 கோடி ரூபா ஒதுக்கீடு

திருகோணமலை, ஜூலை 20

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலை ஆசிரியர்களுக்கு 1998 ஆம் ஆண்டுக்கான இடர்க்காலக் கொடுப்பனவு வழங்க 10 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆசிரியர்களின் இடர்க்காலக் கொடுப்பனவு தொடர்பாக மாகாண ஆளுநர், மத்தியகல்வி அமைச்சு அதிகாரிகள் ஆகியோருக்குக் கோரிக்கை விடுத்து வந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் கொடுப்பனவுக்காக 10 கோடி ரூபாவைத் திறைசேரி மாகாண கல்வி அமைச்சுக்கு ஒதுக்கியுள்ளது என்றும்—

விரைவில் இந்த நிதியில் இருந்து கொடுப்பனவு வழங்கப்படவிருக்கின்றது என்றும் —தெரிவிக்கப்பட்டது.

[8-3]


### சங்கம் அமைப்பு

வலி-தென்மேற்கு, ஜூலை 20

வடக்கு—கிழக்கு மாகாண ''அபிவிருத்தி அலுவலர்'' சங்கம் ஒன்று அண்மையில் உருவாக்கப்பட்டுள்ளது.

(இ-185)

## நீங்காத நினைவில் ஓராண்டு



மலர்வு 17 01 1959

உதிர்வு 31 07 — 1998

### அமரர் செல்லன் வேலாயுதம்

திதி: 20 - 07 - 1999

ஆண் டொன்றென்ன ஆயிரம் கடந்தாலும்
ஆறாது எம் நெஞ்சில் துயரலைகள்
ஆருயிரே எங்கள் அப்பா
ஆறாத் துயரில் எமையெல்லாம் விட்டிட்டு
மீளாத் துயில் கொண்டு விட்டீர்களே.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும்

தாய், அன்பு மனைவி,
பாசமிகு பிள்ளைகள்.

கேயா ஓடை,
புலோலி மேற்கு,
பருத்தித்துறை.

(சி/8202)

## ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்



அன்னை மடியில் 14 03 1930

ஆண்டவன் அடியில் 20 — 06 — 1999

### அமரர் வ. வேலுப்பிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியர், உபஅதிபர்)

நெஞ்சிருக்கும்வரை உன்
நினை விருக்கும் எம்நெஞ்சில்
துஞ்சிடும் போதெல்லாம் உன்
உரு எம்முன் தோன்றுதையா
பிஞ்சுகள் எம்மைப் பார்த்து
தாத்தா எங்கே என்கின்றார்
கெஞ்சி நாம் நிற்கின்றோம்
பஞ்செனப் பறந்தோடி வாராயோ

இன்று (20—07—99 செவ்வாய்க் கிழமை காலை 7.00 மணியளவில் நடைபெறும் ஆத்ம சாந்திக் கிரியைகளில் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்
திரு. இ. குணசீலன்
(நவம் — மருமகன்)

''நிலா முற்றம்''
பொலிகண்டி,
வல்வெட்டித்துறை.

(67489)

### தராசுகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, ஜூலை 20

தென்மராட்சி பிரதேச சபை உப அலுவலகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் 1 30 மணி வரை நிறுத்தல் அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்.

இந்தப் பகுதியில் உள்ள சகல வியாபாரிகளும் தத்தமது தராசுப்படிகளுக்கும், நிறுவை அளவை உபகரணங்களுக்கும் தவறாது முத்திரையிட்டுக்கொள்ள வேண்டும் என்றுயாழ். செயலக நிறுவை அளவைத் திணைக்களத்தின் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் கோரி உள்ளார்.

[இ-30]

### சங்கப் பொதுக் கூட்டம்

உரும்பிராய், ஜூலை 20

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கப் பொதுக் கூட்டம் கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் அதிபர் அ. ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெற்றது. பல ஆண்டு காலமாக செயற்படா திருந்த இந்த சங்கம் புனரமைக்கப்பட்ட பின்பு பொதுக் கூட்டம் நடத்தப்பட்டது. (இ-154)

### கமநல குழுக்கூட்டம்

கொழும்புத்துறை, ஜூலை 20

வட பகுதியில் காலபோக நெற் செய்கைக் காலம் அண்மித்து வருவதால் வி-1 அமோனியா, யூரியா மற்றும் களை நாசினிகள் ஆகியவை கமநல நிலையங்களில் போதியளவு இருப்பில் உள்ளதாக கைதடி கம ல குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(இ-30)

### லயன்ஸ் பதவி அமர்வு நிகழ்வு

வலிகாமம்தெற்கு ஜூலை 20

சுன்னாகம் லயன் கழகத்தினரின் 1999 - 2000 ஆம் ஆண்டுக்குரிய புதிய நிர்வாகிகளை பதவியில் அமர்த்தும் கழ்வு கடந்த வாரம் மருதனார்மடம் யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவன மண்டபத்தில் நடைபெற்றது.

லயன்ஸ் கழகத் தலைவர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட லயன்ஸ் கழக இணைப்பாளர் லயன் கே. வி. முத்துக் குமாரசாமி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

செயலாளர் இ. நற்குணநாதன் தனது ஆண்டறிக்கையை வாசித்தார்.

மருதனார்மடம் விவசாய நிறுவன அதிபர் என். குகதாசன் மரக்கன்றுகள் ஒட்டுதல், பராமரித்தல் சம்பந்தமாக விளக்கம் அளித்தார்.

சுன்னாகம்லயன்ஸ் கழகத்தினரால் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட தையல்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வெளியேறிய முதல் தொகுதியைச் சேர்ந்த 16 பேருக்கு சான்றிதழ்களும் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன.

(இ-152)

### சிறைச்சாலை ஊழியர்கள்

# பொதுமக்களிடம் லஞ்சம் கோருவதாக குற்றச்சாட்டு

மன்னார், ஜூலை 20

மன்னார் சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளைப் பார்வையிடச் செல்லும் போது மக்களிடம் லஞ்சம் கோரப்படுவதாகக் கூறப்படுகின்றது.

தடுத்து வைக்கப்பட்டுள்ளோரில் பெரும்பாலானோர் யாழ்ப்பாணத்தில் இருந்து இடம் பெயர்ந்து மன்னாரில் தங்கியுள்ளவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்றும் —

அவர்களைப் பார்க்கச் செல்லும் பொதுமக்களிடமே லஞ்சம் கோரப்படுவதாகவும் — தெரிவிக்கப்படுகின்றது.

அங்கு பணிபுரியும் தமிழ் ஊழியர்களே லஞ்சம் கோருவதாகவும் கூறப்படுகிறது.

(இ-3)

# 'ரெலிகொம்' நிறுவனத்தில் கைரேகை பதியக் கணனி

கொழும்பு, ஜூலை 20

கடமைக்கு வரும் நேரத்தை பதிவு செய்வதுடன் ஊழியர்களின் கைரேகையையும் பதியும் புதிய முறை ஒன்றை இலங்கை 'ரெலிகொம்' நிறுவனம் விரைவில் தனது தலைமை அலுவலகத்தில் அறிமுகம் செய்யவுள்ளது.

கடமைக்கு வரும் ஊழியர்கள் காட்டை 'பஞ்ச்' செய்யும் முறை தற்பொழுது நடைமுறையில் உள்ளது. இதில் நேரம் மட்டுமே குறிப்பிடப்படுகிறது. இனிமேல் நேரம் பதிவு செய்யப்படுவதுடன் கைரேகையும் பதிவாகும்.

ஏற்கனவே ரெலிகொம் நிறுவனத்தில் கடமைபுரியும் சகல ஊழியர்களினதும் கைரேகைகள் கணனியில் பதியப்பட்டுள்ளன.

கடமைக்கு வரும் ஊழியர் தமது காட்டை 'பஞ்ச்' செய்வதுடன் கைரேகையையும் கணனியின் மேல் வைக்க வேண்டும். ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட கைரேகையுடன் ஒப்பிட்டுப்பார்த்த பின்னரே கணனி இவரை அனுமதிக்கும்.

இந்தப் புதிய கணனி முறைக்காக ரெலிகொம் நிறுவனம் 24 இலட்சம் ரூபா செலவு செய்துள்ளதுடன் அதற்கான உபகரணங்களையும் கொள்முதல் செய்துள்ளது.

இந்தப் புதிய கணனி முறையிலான ஊழியர்கள் வரவுப் பதிவுகளின்போது ஆள் மாறாட்டம் நடைபெறுவது முற்றாகத் தடுக்கப்படும்.

(இ-8)

### காணி கொள்வனவு

வடமராட்சி, ஜூலை 20

கரணவாய் வேதாரணியேஸ்வரா சனசமூக நிலையத்துக்கு புதிய கட்டடம் அமைக்க ஒரு இலட்சம் ரூபா செலவில் காணி கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் காணியில் 5 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்க சனசமூக நிலைய நிர்வாகக் குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

(இ-173)


## வாழ்த்துகின்றோம்

### செல்வி பிரியங்கரி சத்தியசீலன்

(யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை)

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் எழுத்தாக்கம் பிரிவு 2 இல் முதலாம் இடம்பெற்று தங்கப்பதக்கம் பெற்றமைக்காக மனமாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

உறவினர்கள், நண்பர்கள்.

[67581]

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் கட்டுரை ஆக்கம் பிரிவு 2 இல் முதலாம் இடம் பெற்று தங்கப்பதக்கம் பெற்ற

சென் ஜோன் பொஸ்கோ பாடசாலையின் பழைய மாணவி

### செல்வி பிரியங்கரி சத்தியசீலன்

அவர்களை மனதாரப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலய பழைய மாணவ நண்பிகள்.

[67582]

## அரியாலை சனசமூக நிலையம்

(புங்கன்குளம்)

## 1949 ★ பொன் விழா ★ 1999

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் கலை, விளையாட்டு நிகழ்வுகளுடன் இடம்பெறும் முன்னோடியாக யாழ். ரீதியில்

① ஆண்களுக்கான கரபந்தாட்டம் – செற் அப்
② பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்.

விண்ணப்ப முடிவு திகதி: 31-07-99

தொடர்பு: எஸ். ஏ. கணநாதன்
தலைவர்

348, கண்டி வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

(67580)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மாற்றுப் பாதை அவசரம்

விடுதலைப் புலிகளின் வசம் உள்ள வன்னிப் பிரதேசத்துக்கும் இராணுவக்கட்டுப்பாட்டில் உள்ள ஏனைய பகுதிகளுக்கும் இடையேயான போக்குவரத்துத் துண்டிக்கப்பட்டு 24 நாள்கள் ஆகின்றன. புதிய பாதை ஒன்று திறக்கப்படுவதற்கான சாதகமான சூழ்நிலை இன்னும் தோன்றவில்லை.

இதன் விளைவாக வன்னிப் பகுதியில் வாழும் மக்களுக்கு உண்டாகியுள்ள ஆபத்துக்கள், இன்னல்கள், அவலங்கள் குறித்து மனிதாபிமானமும் மனித நேயமும் உள்ளவர்கள் வேதனைப்படுகிறார்கள். தங்கள் உறவுகள் உணவும் இன்றி, வைத்திய வசதியும் இன்றி உயிராபத்தான நிலையில்உள்ளதை அறிந்து குடாநாட்டு மக்களின் மனங்கள் வெந்து கொண்டிருக்கின்றன.

போக்குவரத்துத் தடைப்பட்டதால் உணவு விநியோகம் மருத்துவ வசதி உட்படஅத்தியாவசிய அடிப்படைச் சேவைகள் அங்கு மிகமிக மந்த நிலையை அடைந்துள்ளன. மா, சீனி, பால்மா போன்ற உணவுப் பொருள்கள் தீர்ந்துவிட்டன. அவசர சிகிச்சைக்காக வெளிப் பிரதேசத்துக்குக் கொண்டு செல்ல முடியாததால் நான்கு நோயாளிகள் இதுவரை இறந்துள்ளனர். இவர்களது நிலையில் இன்னும் பலர் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சுமார் 40 பேர் இவ்வாறு மரணத்தின் விளிம்பில் உள்ளதாக உறுதிப்படுத்தப்படாத செய்திகள் உண்டு.

எப்படியோ, பட்டினியும் உயிராபத்தும் மக்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இப்போதைய நெருக்கடியான சூழ்நிலையில், போக்குவரத்துப் பாதையைத் திறப்பதில் நீடிக்கும் தாமதம் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல; நியாயப்படுத்தக் கூடியதும் அல்ல.

இது விடயத்தில் அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் விரைவில் ஓர் இணக்கத்துக்கு வந்து மக்களை ஆபத்தில் இருந்து காப்பாற்ற வேண்டும்; அல்லலில் இருந்து மீட்க வேண்டும் என்பதே தமிழ்மக்கள் எல்லோரதும் விருப்பம் ஆகும்.

மாங்குளம் ஊடாகப் புதிய பாதையைத் திறக்கும் முயற்சி கைகூடும் என்று சொல்வதற்கில்லை. ஆகையால் வேறு ஒரு மாற்றுப் பாதையைத் திறப்பது குறித்து ஆராய்ந்து இரு தரப்பும் இணக்கத்துக்கு வரவேண்டும். இது விடயத்தில் இழுத்தடிப்புக்கும் தாமதத்துக்கும் இடந்தரலாகாது.

முதலாவது முயற்சி கைகூடாததால் இருதரப்பும் மனக்கசப்புற்று சோர்ந்து விடலாகாது; கைவிட்டுவிடலாகாது. எந்தமுகத்தோடு இனிப் பேசுவது என்று எண்ணித் தாமதிக்கவும் கூடாது. மூன்றாந்தரப்பு ஒன்றின் முகதாவிலாவது மாற்றுப் பாதை ஒன்றைத் திறக்க முன்வர வேண்டும்.

வன்னிக்குப் போக்குவரத்துப் பாதை ஒன்றைத் தாமதமின்றித் திறக்க வேண்டிய அவசியத்தைப் பல தரப்புகளும் வற்புறுத்திக் கொண்டிருக்கின்றன.

மாங்குளம் பாதை திறப்பதில் உள்ள தடங்கலை கருத்திற்கொண்டு மூன்றாவது தரப்பு ஒன்றாவது முன் முயற்சி எடுக்க வேண்டும். அந்தத் தேவை எழுந்துள்ளது.

மனித உயிர்கள் சம்பந்தப்பட்ட பாரதூரமான விவகாரம் இது. எனவே தத்தமது மானப் பிரச்சினையாகக் கருதாது மக்கள் பிரச்சினையாக, மனிதநேயப் பிரச்சினையாகக் கருதி மூன்று தரப்புகளும் முன்முயற்சியில் ஈடுபட்டு மாற்றுப் பாதை ஒன்றை அவசரமாகத் திறக்கவல்ல நல் முடிவைக் கொண்டுவரவண்டும். வன்னி மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

# வடமராட்சியில் நிறையும் தரமும் குறைந்த பாண்; விலையைக் குறைத்து விற்பதால் யாருக்கு லாபம்?

## அதிகாரிகள் கவனத்தில் கொள்ள வேண்டும்

**எஸ். தில்லைநாதன்**
வடமராட்சி செய்தியாளர்

வடமராட்சிப்பிரதேசத்தில் தரம், நிறை குறைந்த பாண் விற்பனையால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மிகவும் கஷ்டமான சூழ்நிலை நிலவிய இரண்டாம் ஈழப்போர் காலத்தில் பாண் தயாரிப்பதற்கான கோதுமை மா மாத்திரமன்றி ஏனைய மூலப் பொருள்களுக்குப் பற்றாக் குறையும் அதிக விலையும் நிலவிய போதிலும் தரமான பாணை குறித்த நிறையிலும் நிர்ணய விலையிலும் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்தது.

அக்காலத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்த கொழும்பு பத்திரிகையாளர்கள் கூட யாழ்ப்பாணக் குடாநாட்டில் தயாரிக்கப்படும் பாணின் தரத்தினையும் சுவையினையும் பாராட்டியதோடு கொழும்பு பெரும்பாகப்பகுதியில் கூட இங்கு தயாரிக்கப்படும் பாண் போன்ற தரம் அங்கு இல்லை எனப் புகழ்ந்திருந்தார்கள்,

இரண்டாம் ஈழப்போர் காலத்தில் பேக்கரி உரிமையாளர்கள் தமக்கென சங்கம் ஒன்றை அமைத்து செயற்பட்டதுடன் ஒவ்வொரு பேக்கரியிலும் நிர்ணயிக்கப்பட்ட தரம், நிறை, விலை பிசகாது மக்களுக்குப் பாண் விநியோகம் நடைபெற வேண்டும் என உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அத்துடன் தரம், நிறை, விலை தவறாது இருக்வென சங்க உறுப்பினர்களைக் கொண்ட திடீர்ப் பரிசோதனைக்குழு ஒன்றையும் அமைத்துச் செயற்பட்டு முன்மாதிரியாகத் திகழ்ந்தனர்.

ஆனால் இன்றோ பேக்கரி உரிமையாளர் சங்கம் பெயரளவில் மாத்திரம் இயங்குகின்றது என்றே கருதுவதற்கு இடம் வைத்து விட்டது.

வடமராட்சிப் பிரேசத்தில் தற்போது சுமார் 30 பேக்கரிகள் இயங்குகின்றன. அவற்றில் ஒரு சில சமீபத்திலேயே, அதாவது இரண்டாம் கட்ட ஈழப்போருக்குப் பின்னர், ஆரம்பிக்கப்பட்டவையாகும். அத்தகைய பேக்கரிகளின் உரிமையாளர் சங்கத்தில் உறுப்புரிமை பெறவில்லை. புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இப் பேக்கரிகளில் தயாரிக்கப்படும் பாண் நிறை, தரம் குன்றியதாகவும் அதேவேளை நிர்ணய விலையிலும் பார்க்க மிகக்குறைவான விலையில். (அதேநேரம் விற்பனையாளர்களுக்கு அதிக தரகுப்பணம் வழங்கி) பாண் விற்பனை செய்து வருகின்றன.

யாழ். குடாநாட்டில் ஒரு இறாத்தல் பாண் 350 கிராம் நிறைகொண்டதாக, 9 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட வேண்டும் என்பது யாழ். அரச அதிபரும் பேக்கரி உரிமையாளர் சங்கமும் ஒன்று கூடி எடுக்கப்பட்ட தீர்மானமாகும்.

ஆனால் வடமராட்சிப் பிரதேசத்தில் ஒரு இறாத்தல் பாண், 200 கிராம் தொடக்கம் 250 கிறாம் வரையிலான நிறை கொண்டதாகவும், தரம் குறைந்ததாகவும், உள்ளது. இதே நிறையும், தர

**செய்தி மடல்**

மும்குறைந்தபாண்ஒருஇறாத்தல் என்ற பெயரில் 7 ரூபாவாக விற்பனை செய்யப்படுகிறது. சில இடங்களிலுள்ள சில்லறை விற்பனை நிலையங்களில் விளம்பரப்பலகையிட்டு ஒருறாத்தல் பாண் 7ரூபாஎனவும் விளம்பரப்படுத்தப் பட்டு விற்பனை செய்யப் படுவதையும் காணமுடிகிறது.

### ஏனையோரும் பின்பற்றுகின்றனர்

பேக்கரி உரிமையாளர் சங்கத்தில் உறுப்புரிமை பெறாத சில பேக்கரி உரிமையாளரின் இந்த நடவடிக்கையினால்பாதிப்படைந்த ஏனைய பேக்கரிகளான, சங்கத்தில் உறுப்புரிமை வகிக்கும் பேக்கரி உரிமையாளரும் புதியவர்களின் நடைமுறைகளை பின்பற்றத் தொடங்கியுள்ளனர்.

பாணின் நிறை, தரம்என்பவற்றைப் பொருட்படுத்தாமல் ஒரு றாத்தலுக்கு 2 ரூபா மிச்சம் எனக் கருதி சாதாரண பாமர மக்கள் நிறை, தரம். விலை குறைந்த பாணையே அதிகமாகவாங்கி வருகிறார்கள்.

நிறை. தரம், விலை குறைந்த பாண் எவ்வளவு போசாக்குக் கொண்டது என்பதனை ஆராயும் நிலையில் பாவனையாளர்கள் இல்லை. சாதாரணமாக ஒருவருக்கு ஒரு வேளை உணவுக்கு அரை றாத்தல் பாண் அவசியம் ஆனால் சாதாரண குடும்பம் ஒன்றின் அங்கத்தவர்களுக்கு நிறை தரம் குறைந்த பாணைப் பங்கிடும் போது ஒருவருக்கு அரை இறாத்தல் என்ற பெயருக்கு பார்த்தால் 100 அல்லது 125 கிராம் கொண்டபாணே ஒரு வேளைக்குகிடைக்கிறது. இது சாதாரணமான ஒரு மனிதனுக்கு போஷாக்குக்கு நிறைவானதா? அல்லது நிறைவான உணவாக அமையுமா?

இதுமட்டுமன்றி வடமராட்சிப் பகுதியில் உள்ள வேறு சில பேக்கரிகள் 300 கிறம் எடையுள்ள பாணை 8 ரூபாவாக விற்பனை செய்து வருகின்றன.

ஆக மொத்தத்தில் வடமராட்சிப் பிரதேசத்தில் நிறை, தரம் குறைந்த பாண் 7 ரூபா முதல், நிர்ணயிக்கப்பட்ட 9 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன. எனினும் இப்பிரதேசத்திலுள்ள நகரப்பகுதிகளில் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்ட நிறை, விலையில் பாண் விற்பனை செய்யப்பட்டு வருகிறது ஏனைய இடங்களில் முரண்பாடான விலைகளிலேயே பாண் விற்பனை செய்யப்படுகின்றது. குடாநாட்டில் பாண் இப்போது ஒரு பொது உணவாக மாறி விட்டது. யுத்த காலத்தில் இருநேரமும் பாணைத் தான் அனேகமான மக்கள் சாப்பிட்டார்கள் இப்போது கூட ஒரு வேளைக்கு மேல் பாண் சாப்பிடுகிறவர்களும் உள்ளனர். வருமானம் குறைந்த மக்களின் அபிமான உணவாக பாணே இருந்து வருகிறது.

இந்நிலையில் வடமராட்சிப் பிரதேசத்தில் தரமான நிறைவான, நிர்ணய விலையில் பாண் கிடைக்க ஆவன செய்யப்படவில்லை. பாண் விலை குறைவாக உள்ளது என எண்ணிச்சும்மா இருந்துவிடக் கூடாது. அது தரமானதாகவும் சரியான நிறை கொண்டதாகவும் இருக்க வேண்டும். இதில் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய யாழ். சுகாதாரத்திணைக்கள உணவுப் பரிசோதகர்கள் யாழ். விலைக்கட்டுப்பாட்டு அதிகாரிகள், யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தினர் ஆகியோர் கண்டும் காணாதது போல் இருப்பது வேதனைக்குரிய செயலாகும்.

குறிப்பிட்ட மூன்று தரப்பினரும் தரத்துக்கும், விலைக்கும், கட்டுப்பாட்டுக்கும் பொறுப்பாக இருப்பதால் தத்தம் பணிகளை தாமதமின்றிமேற்கொண்டு வடமராட்சிப் பிரதேசத்தில் தரமான நிறைவான நிறை கொண்ட பாண், நிர்ணய விலையில் கிடைக்கக் கூடியதாக நடவடிக்கை எடுக்க வேண்டும் அதன் மூலமே பாவனையாளர்களுக்குத் தரமான போசாக்கான பாணைப் பெறக்கூடியதாக இருக்கும். இதற்கான நடவடிக்கைகளை தாமதமின்றி மேற்கொள்வரா என்பது கேள்விக்குறியாக முடியக் கூடாது. இதுவே வடமராட்சிப் பாவனையாளர்களின் விருப்பமாகும், ★

# அடைப் பொறி இயந்திரம் பொருத்தும் பணி பூர்த்தி

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அடைப்பொறி இயந்திரம் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையிலுள்ள கோழிப் பண்ணையில் அண்மையில் பொருத்தப்பட்டது.

புதுடில்லியிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் ஒருவரினால் இந்த அடைப் பொறி இயந்திரம் பொருத்தப்பட்டது.

இந்த அடைப்பொறி இயந்திரம் மூலம் ஒவ்வொருவாரமும் ஆயிரம் கோழிக்குஞ்சுகளைப் பொரிக்க வைக்க முடியும் என்று தெரிவிக்கப் படுகிறது.

கனடாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஆயிரத்து 200 தாயினக் குஞ்சுகள் அச்சுவேலி கோழிப்பண்ணைக்கு ஐ. நா. அபிவிருத்தித் திட்டத்தினால் அண்மையில் வழங்கப்பட்டதுடன் இந்தக் கோழிக்குஞ்சுகளுக்குத் தேவையான ஆறு மாதத்துக்குரிய மருந்துவகைகளும் மற்றும் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையிலுள்ள கோழிப் பண்ணையைப் புனரமைப்பதற்குத் தேவையான சகல உதவிகளையும் செய்த ஐ. நா. அபிவிருத்தித் திட்டம் மேற்படி பண்ணையை அண்மையில் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(இ-5)

## நாளை

ஆடி 05
புதன்கிழமை
திதி: அட்டமி
காலை 6.14 வரை.
நட்சத்திரம்: சுவாதி
பின்இரவு 2.25 வரை
சுபநேரம்: 4.31 – 6.01
ராகுகாலம்: 12 01 — 1.31
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

### உதயவாக்கு

ஆன்மாவை தூயமனதின் மூலமே அறிய முடியும்.
— சுவாமி விவேகானந்தர்

# திருமலை இளைஞர் மன்றம் யாழ் மாணவருக்கு உதவி

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வியை அபிவிருத்தி செய்வதற்கென திருகோணமலை தேசிய இந்து இளைஞர் மன்றம் 58 ஆயிரம் ரூபா பெறுமதியான அப்பியாசக் கொப்பிகள் நூல்கள் போன்றவற்றை யாழ். கல்வி வலயப் பணிப்பாளரிடம் வழங்கியுள்ளது

திருகோணமலையில் வைத்து இந்தப் பொருள்களைப் பொறுப்பேற்ற கல்விப் பணிப்பாளர் கலாநிதி என் தணிகாசலம்பிள்ளை செஞ்சிலுவை சர்வதேசக் குழுக் கபபல் மூலம் இவற்றை யாழ்ப்பாணம் கொண்டுவருவதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார். (இ-5-6-ரி)

# பாடசாலைகளில் பொருள்கள் திருட்டு

வலி.கிழக்கு, ஜூலை 20

கடந்த வாரம்மூன்று பாடசாலைகளில் பெறுமதிமிக்க பொருள்கள் களவாடப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

நீர்வேலியில் கரந்தன் பகுதியில் உள்ள பாடசாலை, கோண்டாவில் டிப்போவுக்கு அண்மையில் உள்ள பாடசாலை, கொக்குவில் ஸ்ரீ ராமகிருஷ்ணா வித்தியாலயம் ஆகியவையே இந்த மூன்று பாடசாலைகளும் ஆகும்.

ரைப்பிங்சீற், காபன், புதிய கொப்பிகள்போன்ற பொருள்கள் களவாடப்பட்டுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது இது தொடர்பாக பொலீஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

[இ-180

# மூக்குக் கண்ணாடி

வலி.வடக்கு, ஜூலை 20

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு ஒரு தொகை மூக்குக் கண்ணாடிகள் நெதர்லாந்தில் இருந்து கிடைக்கப்பெற்றுள்ளன.

நெதர்லாந்தைச் சேர்ந்த "சிஸ்டர் றோஜேஸ்" என்னும் நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள இந்த மூக்குக் கண்ணாடிகள் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மக்களுக்கும் மற்றும் இடம்பெயர்ந்த மக்களுக்கும் வழங்கப்படவுள்ளன.

(இ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரூ.25 ஆயிரம் கொடுப்பனவு இனி 3 கட்டங்களாக

வலி. மேற்கு, ஜூலை 20

மாத வருமானம் ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு உட்பட்ட குடும்பங்களின் சேதமடைந்த வீடுகளைத் திருத்த வழங்கப்படும் 25 ஆயிரம் ரூபா நன்கொடை இனி மூன்று கட்டங்களில் வழங்கப்படவுள்ளது.

முதலாம் கட்டத்தில் 10 ஆயிரம் ரூபாவும், இரண்டாம் கட்டத்தில் 10 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் கட்டத்தில் 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும்.

இதற்கான சுற்றறிக்கையை வடக்கின் மீள்குடியேற்ற அதிகாரசபை யாழ். அரசாங்க அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட்ட சுற்றறிக்கையில் முதலாம் கட்டக்கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவும் இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 8 ஆயிரம் ரூபாவும் மூன்றாம் கட்டக் கொடுப்பனவாக 7 ஆயிரம் ரூபாவும் நான்காம் கட்டக் கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போதைய சுற்றறிக்கையைத் தொடர்ந்து யாழ். மாவட்டத்தில் சேதமடைந்த வீடுகளைத் திருத்தி அமைப்பதற்கு 25 ஆயிரம் ரூபா நன்கொடைக்குச் சிபார்சு செய்யப்பட்ட குடும்பங்களுள் முதலாம் கட்டக்கொடுப்பனவு 5 ஆயிரம் ரூபாவைப் பெற்று வீடுகளைதிருத்தியமைத்தவர்களுக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவாக 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

(இ-175)

## சேதமடைந்த வீடுகளைத் திருத்தஅதிகாரசபை கடன்

அளவெட்டி, ஜூலை 20

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை தெல்லிப்பழை, உடுவில் பிரதேச செயலர் பிரிவுகளில் சேதமடைந்த வீடுகளைத் திருத்த புனர்வாழ்வு புனரமைப்பு கடன்களை வழங்கி வருகிறது

25 ஆயிரம் ரூபா முதல் 50 ஆயிரம் ரூபா வரை இந்த கடன் வழங்கப்படுகின்றது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவிலே ஆறு பேருக்கும், உடுவில் பிரிவில் 24 பேருக்கும் புனர்வாழ்வு புனரமைப்புக் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரியவருகிறது.

இந்தக் கடன் பத்து வருட தவணை அடிப்படையில், மாதம் தோறும் திருப்பிச் செலுத்த வசதியாக மிகக் குறைந்த வட்டியுடன் வழங்கப்பட்டு வருவதாக வீடமைப்பு உத்தியோகத்தர் திரு இ. நாகேஸ்வரன் தெரிவித்தார்.

புனர்வாழ்வு புனரமைப்புக் கடன்களைப் பெற விரும்புவோர் கிராம உத்தியோகத்தரின் சிபார்சுக் கடிதத்துடன் உடுவில். தெல்லிப்பழை பிரதேச செயலகங்களில்சந்தித்து விண்ணப்பப் படிவங்களைப் பெற முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(இ-13)

## யுனிசெவ் உதவி

நாவற்குழி, ஜூலை 20

கைதடி நாவற்குழி கிராம சேவகர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கு யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் மலசல கூடம் அமைப்பதற்கு தென்மராட்சி பிரதேச செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது. (இ-102)

# அறநெறிகளை பாடசாலைகளில் மட்டுமன்றி வாழ்க்கையிலும் பேணுக

### கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20

எமது இளம் பிஞ்சு உள்ளங்களை நேரிய வழியில் நல்வழிப் படுத்துவதற்கு அறநெறிப் பாடசாலைகள் பெரிதும் உதவி வருகின்றன. இப்பாடசாலைகளில் மட்டுமன்றி மக்கள் நடமாடும் பொது இடங்கள், அலுவலகங்கள் ஆகியவற்றிலும் சமூகத்தின் வாழ்க்கைப் பரப்பிலும் பாரம்பரிய அறநெறிகள் பேணப்படவேண்டும். எமது வாழ்வில் அறத்தை என்றும் மறக்கக்கூடாது. அறம்தான் எமக்கு நல்வழி காட்டும், அறத்தை மறந்தவர்கள் எவ்வாறு துன்பப்பட்டார்கள் என்பதை எமது புராணங்கள், இதிகாசங்கள் என்பவற்றிலிருந்து அறியக்கூடியதாக உள்ளது.

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட அறநெறி விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் துர்க்கா துரந்தரி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி குறிப்பிட்டார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்றுபத்திரிகைகளில்வரும் சில செய்திகள் அதிர்ச்சியைத் தருவனவாக இருக்கின்றது. இந்தத் துர்ப்பாக்கிய நிலையிலிருந்து நீங்கவேண்டுமானால் நல்ல அறநெறிகளைப் பின்பற்றி வாழ முற்பட வேண்டும். தர்மம், நேர்மை, பெரியோரைக் கனம் பண்ணுதல், பெற்றோரை வணங்குதல் ஆகிய நற்பண்புகளை என்றும் மறக்காது கைக்கொண்டு வாழவேண்டும். இவ்வுலகம் அருளிலேயே பெரிதும் தங்கியுள்ளது. பொருளில் இல்லை என்பதை உணரவேண்டும்.

சமயவைபவங்களை, மக்களுக்கு நற்சேவை செய்யும் நிகழ்வுகளை நடத்துவதற்கே இம் மண்டபம் பெரிதும் பயன்படுத்தப்படவேண்டும் என்பது எமது பிரதான நோக்கம். இந்த வகையில் இந்த விழா மண்டபம் நிறைந்த பெருவிழாவாக இங்கு நடைபெறுவதுமகிழ்ச்சியைத் தருகின்றது — என்றார்.

நல்லை குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோம சுந்தர ஞானசம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் தமது அருளுரையில் குறிப்பிட்டதாவது:

எமது மக்களிடையே தொன்று தொட்டு நிலவி வந்த பொது நோக்கும், ஜீவ காருணியமும் இன்று அருகி வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் அன்று பொது நலன் கருதி வீட்டுப் படலைகளில் தங்கிச் செல்லத் திண்ணைகள், தங்குமிடமண்டபம், சுமைதாங்கி, ஆவுரஞ்சி என்பனவற்றை அமைத்திருந்தார்கள். ஒரு சில இடங்களிலேயே ஆவுரஞ்சி, தண்ணீர்த் தொட்டிகள் அழியாமல் இருந்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

பொதுவாக இவற்றைப் பராமரிப்போர் இல்லாது அழிந்து கொண்டு வருகின்றது. இது போன்ற தர்மமான காரியங்களை எமது சமூகம் இன்று மறந்து விட்டமை பெரும் துரதிர்ஷ்டமாகும். எமது இன்றைய இளம் சந்ததியினர் இதனை அறிந்தும் உணர்ந்தும் இளம் வயதிலேயே நடப்பதற்கு அறநெறிப்பாடசாலைகள் உதவ வேண்டும் — என்று சொன்னார்.

யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் தமது தலைமை உரையில் கூறியதாவது:–

எமது சமயத்தின் ஆழமான புனிதமான தத்துவங்களையும் கருத்துகளையும் அறிந்து கொள்ள அறநெறிப் பாடசாலைகள் பெரிதும் உதவ வேண்டும். திருமுறைகளையும் தேவாரங்களையும் பிழையின்றி ஓதுவதற்கும் எமது இளம் சந்ததியினருக்கு இப்பாடசாலைகள் வழி காட்ட வேண்டும். பெரியவர்கள் நல்ல நெறியில் நடந்து கொள்ளும் போது சிறியவர்களும் அதனைப் பார்த்துப் பின்பற்றி நடப்பதற்கு வழி ஏற்படும். இவ்விழா எமது மத்தியில் புதியதொரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி மக்களை நல்வழியில் இட்டுச் செல்வதற்கு உதவும் என்பது எமது நம்பிக்கையாகும்— என்றார்.

தென்மராட்சி பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை உரையாற்றுகையில் சொன்னதாவது:

நாயன்மார்கள் அன்று பாதைகள் அமைத்தும் கோயில்களை நிறுவியும் சமயப் பணிகளில் ஈடுபட்டு வந்துள்ளார்கள். பல அருளாளர்களும், ரிஷிகளும் வாழ்ந்து ஆன்மீக நெறியைப் பின்பற்றி வந்துள்ளார்கள். இவர்களின் தொண்டுகளை அறியவும், வரலாறுகளைப் படிக்கவும் அறநெறிப் பாடசாலைகள் உதவ வேண்டும். இதுவரை இந்த அறநெறிப் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படாத இடங்களில் எல்லாம் புதிதாக ஆரம்பித்து எமது இளம் சந்ததியினருக்கு உதவுவதற்கு சமூகத்தின் ஒத்துழைப்பும், பெரியோர்களின் ஒத்துழைப்பும் அவசியம் என்று சொன்னார்.

யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி நாச்சியார் செல்வநாயகம் இந்துக்களின் ''வாழ்வும் வழிபாடும்'' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்

அறநெறிப் பாடசாலைகளின் மாணவர்களின் பண்ணிசை, திருமுறை ஓதல், வில்லுப்பாட்டு, நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

(இ-165)

# பொதுமக்கள் நிதி திரட்டி சங்கக் கடைக்குக்கட்டடம்

வலி. கிழக்கு ஜூலை 20

வலி. கிழக்கு வடபகுதி அச்சுவேலி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கு.

புத்தூர் கிழக்கு மக்கள் நிதி திரட்டி ஆலய காணி ஒன்றில் சங்கக்கடைக்கு புதிய கட்டடம் ஒன்றை ஒரு லட்சம் ரூபா செலவில் கட்டி உள்ளனர்.

புத்தூர் கிழக்கு அண்ணமார் ஆலயப் பகுதி மக்களின் வசதி கருதி முன்னர் இங்கு இந்தச் சங்கம் இருந்து வந்தது.

ஆனால் யுத்தக் காரணத்தினால் சங்கக் கட்டடம் முழுமையாக சேதமடைந்ததை அடுத்து அது இயங்காமல் இருந்தது.

இதனை அடுத்து அப்பகுதி மக்கள் ஒன்று சேர்ந்து புத்தூர் கிழக்கு அண்ணமார் ஆலயக் காணியில் இப்புதிய கட்டடத்தினைக் கட்டி வலி. கிழக்கு வடபகுதி அச்சுவேலி சங்கத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

மிக விரைவில் இச்சங்கக் கிளைக் கடை திறக்கப்படும் என பொது முகாமையாளர் தெரிவித்தார். (இ-180)

## வாசகர் திருமுகம்

### வைத்தியசாலை பணிப்பாளர் விளக்கம் தருகிறார்....

ஆஸ்பத்திரி நிர்வாகத்திற்கு முகவரியிடப்பட்டதாக தங்கள் 14 - 07 - 99 திகதியிடப்பட்ட பத்திரிகையில் வாசகர் திருமுகம் பகுதியில் ''யோகா'' யாழ்ப்பாணம் என்பவரால் எழுதப்பட்ட திருமுகம் சார்பாக —

வைத்தியசாலைக்குச் சிகிச்சை பெறவரும் நோயாளிகளுக்கு வசதியான சிகிச்சையளிப்பது நிர்வாகத்தின் கடமை என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

''மெடிக்கல் கிளினிக்''குக்கு 'வருபவர்கள் ஓட்டப்பந்தயம் செய்ய வேண்டுமென்ற அவசியமில்லை. சகல நோயாளிகளும் பார்வையிடப்பட்டே அனுப்பப்படுகிறார்கள்.

நோயாளிகள் தமக்கிடையில் சச்சரவு செய்வதை நிர்வாகம் தவிர்ப்பது கடினம்.

வைத்தியசாலை ஊழியர்கள் தமக்குத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து அனுப்புவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காகவே இரு நுழைவாயில்களை மட்டும் பாவனைக்கு விடும்படி நிர்வாகத்திற்குப் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

நோயாளிகள் இவ்வைத்தியசாலைக்குக் கூடுதலாக வருவதற்குரிய காரணங்களுள் ஒன்று சுற்றுப்புற வைத்தியசாலைகளில் போதிய, உரிய டாக்டர்கள் பற்றாக்குறையாகும்.

வைத்திபசாலை நுழைவாயிலில் நோயாளர்கள் காவல் நிற்பது இங்கு மாத்திரமல்ல, நாட்டின் ஏனைய பகுதி மாகாண வைத்திபசாலைகளின் முன்பாகவும் காணப்படுகிறது.

எப்படி இருப்பினும் உள்ள குறைபாடுகளை நீக்குவதற்கான பல முன்முயற்சிகள் ஏற்கனவே பரிசீலனையில் உள்ளன.

பணிப்பாளர்

அரசினர் பொது வைத்தியாசலை,
யாழ்ப்பாணம்.

### வன்னிக்குப் பணிக்குச் சென்ற வங்கி ஊழியர்கள்

யாழ்ப்பாணத்திலிருந்து வன்னி பெருநிலப்பரப்பிற்கு மாற்றம் கிடைத்துக் கடமைக்குச் சென்ற வங்கி ஊழியர்கள் இரண்டு மூன்று வருடங்களிற்கு மேலாக அங்கு பணியாற்றியும் மாற்று ஊழியர்கள் வன்னிக்குச் செல்வதற்குப் பின்னடிப்பதால் திரும்ப வர முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

வன்னியில் இவர்களது சேவைக்காலம் ஒரு வருடம் என முதலில் கூறப்பட்டது ஆனால் 2, 3 வருடங்களாக இங்கிருந்து சென்றவர்களே சேவையாற்றி வருகிறார்கள். மேலிடத்தில் விசாரித்தால் ஆட்களை அனுப்புகிறோம் சிறிது பொறுமையாக இருங்கள் எனச் சொல்லிச்சொல்லியே காலத்தைக் கடத்துகிறார்கள்.

மாற்ற உத்தரவு கிடைத்த (இப்போது யாழ்ப்பாணத்தில் பணிபுரியும்) ஊழியர்களோ ''நாங்கள் வன்னிக்குப் போகமாட்டோம்'' என்று அடம்பிடிக்கிறார்கள். இவர்களின் செயலை மேலிடத்து உத்தியோகத்தர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். முதலில் இடமாற்றம் பெற்றுச் சென்றவர்களுக்கு மாற்று ஏற்பாடு எதுவும் இரண்டு வருடங்களாக மேற்கொள்ளப்படவில்லை.

முன்னர் வன்னிக்குச் சென்ற ஊழியர்களும், போர்க்கால சூழ்நிலையில், தமது குடும்பம், குழந்தைகளை விட்டுப் பிரிந்து கடமைக்கு முன்னுரிமை கொடுத்துச் சென்றுள்ளார்கள். மற்ற ஊழியர்களும் மனித நேயத்துடன் வரிசைக் கிரமமாக சேவைக்காலப்படி வன்னிக்குச் சென்று தமது சேவையை ஆற்றலாம் அல்லவா?

இவ்விடயத்தில் தவறு யாரிடம் உள்ளது? மேலதிகாரிகளின் நிர்வாகக் குறைபாடா அல்லது ஏனோ தானோ என்ற மனப்பான்மையா? வன்னிக்குப் போனவர்கள் பட்டதே பாடு, எமக்கு என்ன, நாம் நகரில் ''ஹாயாக'' இருப்போம் என்ற எண்ணமா?

''வெற்றிமணி''

வடமராட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணனி சாதனங்களை எடுத்துவர பாதுகாப்பு அமைச்சு கட்டுப்பாடு

## யாழ். கல்வி அலுவலக பணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ். கல்வி வலயத்துக்கென வழங்கப்பட்ட பல கணனிகள் செயற்படவைக்க முடியாத நிலை ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கணனிகள் கொழும்பில் இருந்து எடுத்து வரப்பட்ட போதும் அவற்றுக்கான 'கோட் வயர்'களை எடுத்து வருவதற்கு பாதுகாப்பு அனுமதி கிடைக்காததனாலேயே கணனிகளைச் செயற்படுத்த முடியாத நிலை தோன்றியுள்ளது.

இதனால் கல்வி வலயப் பணிகளை கணனி மயப்படுத்துவது தாமதமடைந்து வருகின்றது.

பல இலட்சக் கணக்கான ரூபா நிதியைச் செலவிட்டுக் கணனிகளைக் கொள்வனவு செய்தும் அவற்றைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியிருப்பதையிட்டு யாழ். கல்வி வலய வட்டாரங்கள் அதிருப்தி அடைந்துள்ளன.

இதேவேளை—

யாழ். கல்வித் திணைக்களத்துக்கு இன்ரநெற் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு அவசியமான 'மொடம்' என்னும் சாதனத்தையும், டிஜிட்டல் பிரிண்டர் ஒன்றையும் யாழ்ப்பாணம் எடுத்துவருவதற்கான பாதுகாப்பு அனுமதியும் இதுவரை வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-5-6-ரி)

## வாய்க்காலில் தடை

வலிகாமம் தெற்கு ஜூலை 20

மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையின் பின் வீதியில் இருந்து ஆஸ்பத்திரி ஊடாக மானிப்பாய் மருதடி குளத்தைச் சென்றடையும் 8/3 ஆம் இலக்க வாய்க்காலில் ஒருபகுதியில் நீர் ஓடமுடியாதவாறு மண் போடப்பட்டுள்ளது.

சுமார் ஒரு இலட்சம் ரூபா செலவில் அண்மையில் இந்த வாய்க்கால் புனரமைப்புச் செய்யப்பட்டிருந்தது.

இதே போன்று மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்தின் முன்பாகச் செல்லும் 8/2 ஆம் இலக்க வாய்க்காலும் தூர்ந்து மூடப்பட்டுவிட்டது (இ,152)

# காணாமற் போயிருந்தவர் பொலீஸாரால் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ்ப்பாணத்தில் காணாமல் போனதாக தெரிவிக்கப்பட்ட கந்தர்மடத்தைச் சேர்ந்த இளைஞர் கோப்பாய் பொலீஸாரினால் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளார்.

கந்தர்மடம் அரசடி வீதியைச் சேர்ந்த கபிரியேல் செறிங்டல் [வயது 26] என்பவர் கடந்த 13 ஆம் திகதி முதல் காணாமல் போய்விட்டதாக அவரது மனைவியினால் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது

இந்த முறைப்பாடு செய்யப்பட்ட சில நாள்களின் பின்னர் தமது கணவர் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்திச் செல்லப்பட்டதாக மனைவி மீண்டும் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்தார்.

இந்த முறைப்பாடுகளைப் பதிவு செய்து கொண்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மாவட்ட இணைப்பதிகாரி எஸ். ஸ்ரீதரன் குடாநாட்டிலுள்ள படை முகாம்கள் மற்றும் பொலீஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு இவர் தொடர்பான தகவல்களை விசாரித்தார்.

இதனைத் தொடர்ந்து கடந்த ஆறு நாள்களாக கோப்பாய் பொலீஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர் நேற்று விடுவிக்கப்பட்டார். [ஐ-5-6]

## நியமனம்

வலி. தென்மேற்கு, ஜூலை 20

யாழ். மாவட்டத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூன்று பேர் வடக்கு – கிழக்கு மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ரி. இளமுருகன், எஸ். உமாகாந்தன், எஸ். ஜெபவிந்தன் ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். (ஐ-185)

# பல்கலை பழைய மாணவர் விவரங்கள் சேகரிப்பு

யாழ். பல்கலைக்கழகத்தில் இதுவரை கல்வி பயின்று வெளியேறிய பழைய மாணவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காக அவர்களின் விவரங்களைச் சேகரிக்கும் தொடர்பகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருகின்றது.

கடந்த 25 வருட காலத்தில் கல்வி கற்றவர்கள், பட்டங்கள் பெற்றவர்கள் சுமார் 10 ஆயிரம் பேர் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இவர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்த பல்கலைக்கழகம் விரும்புகின்றது என்றும் அதன் மூலம் பல்கலைக் கழகத்துக்கும் அவர்களுக்கும் நன்மைகள் கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

இந்தத் தகவல்கள் அவர்களின் நலன்களை மேம்படுத்தவும், பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் அவர்களின் பங்களிப்பை முன்னெடுக்கவும் பேருதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பழைய மாணவர்கள் அவர்களது தற்போதைய முகவரியான 'பழைய மாணவர் தொடர்பகம், யாழ். பல்கலைக்கழகம். திருநெல்வேலி யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு துணைவேந்தர் கேட்டிருக்கின்றார். (ஐ)

## 'உ' கார்ட்டுக்கு அரிசி, சீனி

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுக் கிளைக் கடைகள் மூலம் 'உ' கார்ட் பாவனையாளர்களுக்கு 10 கிலோ அரிசியும் 3 கிலோ சீனியும் தற்போது விநியோகிக்கப்படுகின்றது.

குத்தரிசி கிலோ 31 ரூபாவாகவும், சீனி கிலோ 26 ரூபாவாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாதம் 26 ஆம் திகதி வரை இந்த விநியோகம் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. [இ-152]


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

**பட்டமளிப்பு விழா 1999**

**வீடியோ, புகைப்படம்பிடித்தல்**

யாழ். பல்கலைக்கழகப் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 1999 – 10 – 06 ஆம் திகதி நடைபெறவுள்ளது இவ் விழா நிகழ்வை வீடியோப் படம் எடுப்பதுடன் 500 புகைப்படங்கள் வரை (போஸ்ட்காட் அளவுள்ள கலர்ப்புகைப்படம்) எடுக்க வேண்டியுள்ளதால் தகுதி வாய்ந்த வீடியோ, புகைப்படப் பிடிப்பாளர்கள் தங்களது விலைக் கூற்றை 1999 – 08 – 10 ஆம் திகதிக்கு முன்னர் 'உதவிப் பதிவாளர், கல்விக்கிளை, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்' என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

– பதிவாளர்

யாழ். பல்கலைக்கழகம்.
1999 - 07 – 17

(சி/8241)


# வெகுஜன தொடர்பு சாதன அமைப்பு நாளை பேரணி நடத்த ஏற்பாடு

கொழும்பு, ஜூலை 20

கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் ஐ. தே. க நடத்திய பேரணியில் பத்திரிகையாளர்கள் தாக்கப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து கொழும்பில் உள்ள வெகுஜனத் தொடர்புச் சாதன அமைப்பினர் நாளை பேரணி ஒன்றை நடத்த இருக்கின்றனர்.

ஜனாதிபதியின் வாசஸ்தலமான அலரிமாளிகை முன்பாக இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற விருப்பதாக கூறப்பட்டது.

15 ஆம் திகதி இடம்பெற்ற சம்பவத்தில் 6 பத்திரிகையாளர்கள் காயம் அடைந்திருந்ததும்—

அவர்களது கமெராக்கள் சேதமாக்கப்பட்டதும்—தெரிந்தவையே.

(இ-3)

# அடக்கு முறையை உடைத்தெறியும் நோக்கத்துடன் செயற்பட்டவர் உமா

## வீர மக்கள் தின நிகழ்வில் உரை

யாழ்ப்பாணம், ஜூலை 20

அனைத்து அடக்கு முறைகளையும் உடைத்தெறிய வேண்டும் என்ற நோக்கத்துடன் மக்கள் போராட்டத்தை வழி நடத்திச் சென்ற மகத்தான தளபதி புளொட் ஸ்தாபகர் உமாமகேஸ்வரனாவார்.

இவ்வாறு புளொட் அமைப்பின் வீர மக்கள் தினத்தின் இறுதி நாள் நிகழ்வான உமாவின் 10 ஆவது சிரார்த்த தின வைபவத்தில் உரையாற்றிய புளொட் அமைப்பின் அரசியல் துறை உதவிப் பொறுப்பாளர் எஸ். இருதயராஜன் தெரிவித்தார்.

புளொட்டின் யாழ். பிராந்திய தலைமையகத்தில் சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் அவர் மேலும்உரையாற்றும் போது கூறியதாவது:-

சாத்வீக ரீதியில் ஆரம்பிக்கப்பட்ட எமது போராட்டம் இன ரீதியாக அடக்கி ஒடுக்கப்பட்டபோது ஆயுதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. சிவகுமாரன், சத்தியசீலன் போன்றோரால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்திற்கு அப்போது நில அளவை அதிகாரியாக வேலை செய்துகொண்டிருந்த எமது தலைவர் உமாமகேஸ்வரன் புதுவடிவம் கொடுத்து மக்கள் போராட்டமாக முன்னெடுப்பதில் பெரும் பங்காற்றினார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற அமைப்பை அவர் உருவாக்கிப் போராடிக்கொண்டிருந்த பொழுது இந்த அமைப்பில் சிறு முரண்பாடு ஏற்பட்டது.

இதனைத் தொடர்ந்து 1981 ஆம் ஆண்டு புளொட் அமைப்பை ஸ்தாபித்து அரசியல் பொருளாதார சமூக ரீதியான விடுதலையை அவர் முன்னெடுத்தார்.

மக்களில்லாத மண்ணின் விடுதலையை அவர் ஒரு போதும் விரும்பியதில்லை. இதனால் 1986 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றசகோதரப்படு கொலைகளைத் தொடர்ந்து எமது அமைப்பின் செயற்பாடுகளை யாழ்ப்பாணத்தில் நிறுத்தி வைக்குமாறு ஆலோசனை கூறினார்.

அன்று யாழ்ப்பாணத்திலிருந்து பின்வாங்கிய நாம் எல்லைப் புறங்களில் எமது செயற்பாடுகளை விஸ்தரித்தோம். வவுனியா தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

எனவே அங்கே எமது செயற்பாடுகளை ஆரம்பித்து செயற்பட்டுக் கொண்டிருந்த வேளையில் 1997 ஆம் ஆண்டும் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்து மக்கள் பணிகளைச் செய்து கொண்டிருந்தோம்.

இப்படி அவர் கூறினார்.

புளொட் அமைப்பின் யாழ். மாநகர சபை உறுப்பினர் எஸ். ஜெயச்சந்திரனும் இக் கூட்டத்தில் உரையாற்றினார்.

பாலர் பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், ஊனமுற்றவர்கள் என பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டன.

(இ)


George Webster Memorial

**CHALLENGE TROPHY**

**( FOUNDERS DAY )**

( யாழ். நகரில் முதலில் துடுப்பாட்டத்தை அறிமுகப்படுத்தியவர் )

**யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின்**

அனுசரணையுடன்

**சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம்**

நடத்தும்

6 பேர் கொண்ட

ஆறு ( 6 ) ஓவர்களைக் கொண்ட

**கிரிக்கெட் சுற்றுப் போட்டி**

விண்ணப்ப முடிவு திகதி:– 23 – 07 – 99
அணி ஒழுங்கு தெரிவு:– 25 – 07 – 99
பிற்பகல் 4–00 மணி.

போட்டி நடைபெறும் நாள்கள்:
28 - 07 - 99 ( போயா தினம் )
31 - 07 - 99 ( சனிக்கிழமை )
1 - 08 - 99 ( ஞாயிற்றுக்கிழமை )

அனுமதிக் கட்டணம்: 100/-

விண்ணப்பப்படிவங்களை போட்டிக்குழு இணைச் செயலாளர்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.

சொ. விமலதாசன்
கிரிக்கெட் செயலாளர்,
சென்றலைட்ஸ்
விளையாட்டுக் கழகம்.

S. பிறேம்குமார்,
செயலாளர்
பழைய மாணவர் சங்கம்,
யாழ். மத்திய கல்லூரி.

(சி/8244)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சகல...

(முதலாம் பக்கத் தொடர்)

ஊழியர்களுக்கான இடர் காலக் கொடுப்பனவு, சம்பள நிலுவை ஆகியவற்றை வழங்குவதில் தாமதம் என்பவை உட்பட ஒன்பது பிரச்சினைகளுக்கு உடனடியாக நிரந்தரத் தீர்வு வழங்குமாறு கோரியே இந்த சுகவீன லீவுப் போராட்டத்தை தமிழர் ஆசிரியர் சங்கம் முன்னெடுத்தது.

யாழ்ப்பாணம், வலிகாமம் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய ஐந்து கல்வி வலயங்களிலும் சகல பாடசாலைகளுமே நேற்று இயங்கவில்லை என்று 'உதயன்' பிரதேசச் செய்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

கிராமப்புறங்களில் நேற்றுக் காலை சிலபாடசாலைகளுக்கு மாணவர்கள் வருகை தந்திருந்தபோதும் உடனேயே அவர்கள் வீடு திரும்பினர்.

நெடுந்தீவு, நயினாதீவுப் பகுதிகளிலுள்ள பாடசாலைகள் நேற்று வழமைபோல் இயங்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் நேற்று தவணைப் பரீட்சைகள் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த போதும் சுகவீன லீவுப் போராட்டத்தைத் தொடர்ந்து அவை நடத்தப்படவில்லை.

மாணவர்கள், ஆசிரியர்களின் வரவின்மையால் நேற்றுப் பாடசாலை வகுப்பறைகள் யாவும் வெறிச்சோடிக் காணப்பட்டன.

இதேவேளை—

கிழக்கு மாகாணம் மற்றும் வன்னிப் பகுதிகளிலுள்ள பாடசாலைகளிலும் ஆசிரியர் போராட்டம் நடைபெற்றது.

தமது சங்கம் முன்னெடுத்த இப்போராட்டம் 90 சதவீதம் வெற்றியளித்துள்ளதாக இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

அதேவேளை இப் போராட்டம் முழு வெற்றி பெற ஒத்துழைத்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசார் ஊழியர்கள். பெற்றோர்கள் உட்பட சகலருக்கும் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் நன்றி தெரிவித்துள்ளார். [ஐ-5-6-15-9-31-13-51-27-86-111-135-152-180-173]

## குருக்கள் அபிஷேக பட்டம்

வலி.தென்மேற்கு ஜூலை 20

தென்னிந்தியத் திருச்சபை வட்டுக்கோட்டை பேராலயத்தில் மூன்று திருச்சபை ஊழியர்களுக்கு குருக்கள் அபிஷேகப்பட்டம் வழங்கப்பட்டது.

தென்னிந்தியத் திருச்சபை பேராயர் கலாநிதி எஸ்.ஜெபநேசன் தலைமையில் இடம்பெற்ற அருட்பொழிவு வழிபாட்டிலேயே மேற்படி மூவரும் குருக்கள் பட்டம் பெற்றனர்.

யாழ்ப்பாணக் கல்லூரி வணிகவியல் சிரேஷ்ட ஆசிரியர் வண. ஜி. நடராஜா (காரைநகர் திருச்சபை ஊழியன்), வண. ஜி. டி. மைனசீலன் (ஆனைக்கோட்டை காந்திஜீ கிராம திருச்சபை ஊழியன்), வண. ஏ. கே. சுரேந்திரன் (உடுப்பிட்டி திருச்சபை ஊழியன்) ஆகியோரே குருக்களாகப் பட்டம் பெற்றனர்.

(ஐ-185)

### மன்னாரில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இதனைத் தொடர்ந்து இத் தாக்குதலை நடத்தியதாகச் சந்தேகிக்கப்படும் விடுதலைப் புலிகளைத் தேடிச்சென்ற சனிவிலேஜ் முகாம் படையினர் கீரி கிராமத்தில் மேற்கொண்ட பரவலான துப்பாக்கிப் பிரயோகத்தில் சிக்கி சிவிலியன்கள் பலர் காயமடைந்தனர். இவர்களில் படுகாயமடைந்த நால்வர் அனுராதபுரம் ஆஸ்பத்திரியிலும், மூவர் மன்னார் ஆஸ்பத்திரியிலும் அனுமதிக்கப்பட்டனர்.

படையினரால் தாக்கப்பட்டும் சிலர் காயமடைந்துள்ளதாக மன்னார் செய்திகள் தெரிவித்தன.

கீரி கிராமத்தில் பொது மக்களின் ஐந்து குடிசை வீடுகளும், ஒரு கடையும், மினி சினிமா கொட்டகை ஒன்றும் படையினரால் தீக்கிரையாக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது,

இச் சம்பவங்களை அடுத்து அக் கிராமத்தில் இருந்து நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இவர்களில் பலர் மன்னார் ஆயர் இல்லப்பகுதிக்கு தப்பிச் சென்றதாகக் கூறப்படுகிறது.

(ஐ-9-21-164)

## வேலணை...

(முதலாம் பக்கத் தொடர்)

அதற்குள் இந்த எலும்புக் கூடு காணப்பட்டது.

எலும்புக் கூட்டுடன் பச்சை நிறச் சேலை, ஊதா நிற மேற்சட்டை என்பனவும் காணப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

இது குறித்து அப்பகுதி கிராம அலுவலருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்தது.

இந்தக் கிணறு அமைந்துள்ள வீட்டில் இடப்பெயர்வுக்குப் பின்னர் அண்மையிலேயே ஆள்கள் மீளக் குடியமர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-உ)


## மரண அறிவித்தல்

### பேரம்பலம் கந்தசாமி

[ஓய்வுபெற்ற நயிந்தாஸ் கணக்காளர்]

திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட பேரம்பலம் கந்தசாமி [ஓய்வுபெற்ற நயிந்தாஸ் கணக்காளர்] அவர்கள் 19—07—99 நேற்று அதிகாலை காலமானார்.

அன்னார் பேரம்பலம்-பொன்னம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் தங்கமலரின் அன்புக் கணவரும் செந்தில்வதனா, செந்தில்ரங்கன், செந்தில் மோகன், செந்தில் ராஜன், செந்தில்நாதன் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், கனகமணி, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுந்தரமூர்த்தி, விஜயராணி, சாந்தினிதேவி, நகுலமனோகரி ஆகியோரின் மருமகனும் கார்த்திகா, காண்டீபன், பானு லதா, லவஜீவன், நிரோஜன், சாரங்கன், சிறீரங்கன், சிந்தியா, கண்ணன், பார்த்திபன், புவித்திரா, சிமித்திரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 20—07—99 பி.ப.3 மணி அளவில் கழுவோவில பீரிஸ்பிறதர்ஸ் மண்டபத்தில் இருந்து கொகுவலமயானத்துக்குஎடுத்துச்செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்

ந. சுந்தரமூர்த்தி (மருமகன்)

கொழும்பு. [67595]


# ரயில்வே எஞ்சின் சாரதிகள் இன்று வேலை நிறுத்தம்

## ரயில் சேவைகள் ஸ்தம்பிக்கும்

கொழும்பு, ஜூலை 20

ரயில்வே எஞ்சின் சாரதிகள் பல கோரிக்கைகளை முன் வைத்து இன்று சுகவீன லீவுப் போராட்டம் ஒன்றை ஆரம்பிக்கவுள்ளனர்.

இதனால் நாடு முழுவதும் ரயில் சேவைகள் இன்று ஸ்தம்பிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆள்சேர்ப்பு முறைகளில் உள்ள முரண்பாடுகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதே அவர்களதுபிரதான கோரிக்கை ஆகும்.

எஞ்சின் சாரதிகளின் இந்தக் கோரிக்கைகளுக்கு இணங்கினால் ரயில்வே திணைக்களத்தின் ஏனைய தொழிற் சங்கங்களும் பல்வேறு கோரிக்கைகளை முன் வைக்க முற்படுமென்று ரயில்வே பொது முகாமையாளர் டபிள்யூ.கே.பி. வேரகம தெரிவித்தார்.

எஞ்சின் சாரதிகளின் கோரிக்கைகள் நியாயமற்றவை எனப் போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்தார்.

பல கட்டப் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட போதும் எதுவித பயனும் ஏற்படாததால் தொழிற்சங்க நடவடிக்கைகளில் தாங்கள் ஈடுபடவுள்ளதாக எஞ்சின் சாரதிகளின் சங்கப் பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார்.

பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தடுப்பதற்கு மாற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று ரயில்வே பொது முகாமையாளர் தெரிவித்தார்.

ஒப்பந்த அடிப்படையில் எஞ்சின் சாரதிகள் நியமிக்கப்படுவதுடன் ரயில்வே நிலையங்களுக்கிடையே புதிய பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்படுமெனவும் அவர் தெரிவித்தார்.

(ஐ-9)

## சனசமூக நிலையம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஜூலை 20

நவாலி வடக்கு சனசமூக நிலையம் 35 ஆயிரம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளதாக வலி. தென்மேற்கு, பிரதேசசபைத் தலைவர் வெ. அ. ஜோண்சன் தெரிவித்தார்.

(ஐ-185)

### சம்பவம்...

(முதலாம் பக்கத் தொடர்)

யினரையும் கைது செய்யுமாறு உத்தரவிட்டதுடன் நடந்த சம்பவத்துக்காக அந்தப்பகுதி மக்களிடம் மன்னிப்புக் கோரினார். அவருடன் மன்னார் மாவட்ட இணைப்பதிகாரியாக—புதிதாகப் பதவியேற்க இருக்கும் பிரிகேடியர் குலதுங்கவும் அங்கு சென்றிருந்தார். மன்னார் செயலக அதிகாரிகள் இருவரும் உடன் சென்றிருந்தனர்.

அந்தப் பகுதியில் பொது மக்கள் மத்தியில் பீதி ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்குடன் பொலீஸ் பாதுகாப்பை அதிகரிக்குமாறு படை அதிகாரிகள்உத்தரவிட்டுள்ளனர்.

இதேவேளை—

படையினரால் தீக்கிரையாக்கப்பட்ட ஐந்துவீடுகளின் சொந்தக்காரர்களுக்கும் தலா 10 ஆயிரம் ரூபா நஷ்டஈடு வழங்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. (ஐ-164)

### அதிபர்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடர்காலக் கொடுப்பனவை வழங்குமாறு நேற்று 'பக்ஸ்' மூலம் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துக்கு உரிய இடர்காலக் கொடுப்பனவை வழங்கவே மாகாணக் கல்வி அமைச்சினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-5)

### அ.புரம்...

[முதலாம் பக்கத் தொடர்]

ஞான பாட ஆசிரிய ஆலோசகரான இவர் சாவற்காட்டைச் சேர்ந்தவர்.)

★ மரியாம்பிள்ளை உஷா நந்தினி (வயது 25)

★ சந்திரசேகரம் மாணிக்கம் (வயது 50)

இவர்கள் இருவரும் கீரி கிராமத்தில் வீடுகளிலிருந்த சமயம் சூட்டுக்கு இலக்காகினர்.

இவர்களை விட நால்வர் மன்னார் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர். அவர்களில் வேலாயுதம் தனுஸ்கோடி என்பவர் (வயது 50) ஆபத்தான நிலையிலிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-9-164)

### நேற்று புளொட் பிரமுகர் இறுதிச்சடங்கு:

## படையினரின் துப்பாக்கியால் மரியாதை வேட்டுக்கள்!

வவுனியா, ஜூலை 20

வவுனியாவில் கடந்த வெள்ளியன்று குண்டு வெடிப்பில் பலியான புளொட் அமைப்பின் சிறப்புத் தளபதியும் அந்த அமைப்பின் உப-தலைவர் மாணிக்கதாசனின் செயலாளருமான சபாரத்தினம் பாஸ்கரனின் (டுமால்) இறுதிச்சடங்குகள் நேற்று மாலை 4 மணியளவில் கோயில்குளத்தில் நடைபெற்றன.

அவரது இல்லத்தில் நடந்த அஞ்சலிக் கூட்டத்தில் புளொட் பிரமுகர்கள் பலர் உரையாற்றினர். உப தலைவர் என். மாணிக்கதாஸனின் செய்தி ஒன்றும் அங்கு வாசிக்கப்பட்டது.

பாஸ்கரனுக்கு இராணுவ மரியாதை செலுத்துவதற்காக கோயில்குளம் மயானத்தில் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

மரியாதை வேட்டுக்களைத் தீர்ப்பதற்காக துப்பாக்கிகள் படையினரிடம் இருந்து பெறப்பட்டிருந்தன. வேட்டுக்கள் தீர்க்கப்பட்ட பின்னர் வெற்றுச் சன்னங்களும் துப்பாக்கிகளும் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டன.

என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியாவில் புளொட் அமைப்பினரின் ஆயுதங்கள் படையினரால் பெறப்பட்டிருப்பது தெரிந்ததே.

(ஐ-164)

## அபிவிருத்தி உதவியாளருக்கு பயிற்சி

வலி.தென்மேற்கு ஜூலை 20

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களங்களில் நியமிக்கப்பட்ட 10 அபிவிருத்தி உதவியாளர்களுக்கு (Development Assistant) மூன்று நாள்கள் திட்டமிடல் சம்பந்தமான விசேட பயிற்சி ஒன்று வழங்கப்படவுள்ளதாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார்.

மேற்படி அபிவிருத்தி உதவியாளர் பயிற்சி நெறி பிராந்திய அலுவலகத்தில் நாளை முதல் 3 நாள்களுக்கு நடத்தப்படவுள்ளது. (ஐ-185)

### ஜி. சீ. ஈ...

(முதலாம் பக்கத் தொடர்)

இதேவேளை —

வன்னிப் பகுதியிலிருந்து ஜி. சீ. ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் 3 பாடசாலைகளின் மாணவர்களின் பெயர்கள் பரீட்சை மண்டப ஒதுக்கீட்டுப்பட்டியலில் இடம் பெறவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது,

பாலிநகர் மகா வித்தியாலயம், யோகபுரம் மகா வித்தியாலயம், பாண்டியன்குளம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலை மாணவர்களின் இட ஒதுக்கீட்டு விவரங்களே பட்டியலில் இடம்பெற வில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. இதனால் 87 மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பாதை திறப்பு சாத்தியப்படாமையினால் மாணவர்கள் இது தொடர்பாக பரீட்சை ஆணையாளருக்கு தபால் மூலம் மனுச் செய்ய முடியாதுள்ளது.

இந்த நிலை தொடரும் பட்சத்தில் பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்திலும் இந்த மாணவர்கள் பரீட்சைக்கு தோற்ற முடியாத நிலை தோன்றும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மாணவர்கள் உரிய காலத்தில் பரீட்சைக்கு விண்ணப்பித்தும் இவர்களின் பெயர்கள் பரீட்சை மண்டப ஒதுக்கீட்டுப் பட்டியலில் இடம்பெறாதிருப்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-9)

## கணனி பயிற்சி பூர்த்தி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் 30 பேர் முதல் அணியில் கணனிப் பயிற்சிநெறியை முடித்துள்ளதாக கல்லூரி அதிபர் ஜி. இராஜநாயகம் தெரிவித்துள்ளார்.

முதலாவது அணிக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாகவும்—

இரண்டாவது பயிற்சி நெறி விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும்—

தெரிவிக்கப்பட்டது.

### செஞ்சிலுவை...

(முதலாம் பக்கத் தொடர்)

நிவாரண வெட்டால் பாதிக்கப்பட்டோர் சங்கம், வர்த்தக சங்கங்கள் உட்பட பல அமைப்புகளும் பொது மக்களும் இந்த மறியல் போராட்டத்தில் கலந்துகொண்டனர்.

ஐ. நா. தூதரகம், செஞ்சிலுவை சர்வதேசக் குழு ஆகியவற்றின் அலுவலகங்கள் முன் நீண்ட வரிசையில் பாரஊர்திகள் நிறுத்தப்பட்டிருந்தன.

இந்தப் போராட்டம்இன்று முதல் இரவு பகலாக தொடரும் என வடபிராந்திய பாரஊர்திகள் சங்கத் தலைவர் ரீ. பாஸ்கரன் தெரிவித்தார்.

(ஐ-9)

### செஞ்...

(முதலாம் பக்கத் தொடர்)

செய்யப்பட்டார்.

அலுவலகத்துக்கு வெளியே 'வயர் லெஸ்' கருவியுடன் காணப்பட்டதால் அவரைக் கைது செய்ததாகப் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

செஞ்சிலுவை அதிகாரிகள் தலையிட்டதை அடுத்து அவர் நேற்று நண்பகல் விடுவிக்கப்பட்டார். (ஐ-21)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20-07-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org